விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 மாசி 02 செவ்வாய்க்கிழமை (14.02.2006) தொலைபேசி 222 3378 ஒலி 57

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# தாயகக் கோட்பாட்டை ஏற்கமுடியாது
# ஒற்றையாட்சியின் கீழே நிரந்தரத் தீர்வு

## ரொய்ட்டருக்கு ஜனாதிபதி பேட்டி

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப்புலிகள் முன்வைக்கின்ற தமிழர்தாயகக் கோட்பாட்டை ஏற்க முடியாது என்றும் ஒற்றையாட்சியின் கீழ்த்தான் நிரந்தரத் தீர்வு என்றும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார். ரொய்டர் செய்தி நிறுவனத்துக்கு அவர் அளித்த செவ்வியிலேயே இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையென்பது ஒரேநாடுதான். அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்ளலாம் ஆனால் தனிநாட்டு கோரிக்கைக்கு இடமளிக்க முடியாது. அந்த யோசனையை புலிகள் முற்றாக கைவிடல் வேண்டும் என அவர் தெரிவித்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரெலோ காரியாலயம் மீது நேற்றிரவு கைக்குண்டு வீச்சு


(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நகரில் உள்ள ரெலோ அமைப்பின் காரியாலயம் மீது நேற்றிரவு 7.45 மணியளவில் இனந்தெரியாத நபர்களினால் கைக்குண்டுத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டுள்ளன.

இச் சம்பவத்தில் மாவட்டச் செயலாளர் தம்பியப்பா லோகநாதன் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இக் காரியாலயம் மீது 5கைக்குண்டுகள் வீசப்பட்ட போதிலும் இதில் மூன்று குண்டுகள் வெடித்ததாக அவ்வமைப்பு தெரிவித்துள்ளது. (ச-4)

## மட்டு. விகாராதிபதி உண்ணாவிரதப் போர்

மட்டக்களப்பு பிரதேச மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவில்லை என்றும் விகாரைக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்றும் தெரிவித்து மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராமய



விகாராதிபதி வண.அம்பிட்டிய சுமனரத்தின

# அரசு யுத்தசூழலை உருவாக்குகிறது
# தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றச்சாட்டு

அரசாங்கம் போர்ச்சூழலை உருவாக்குகிறது. மக்களை ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளில் செயற்பட்டு போருக்கான சூழலை உருவாக்கி வருகிறது. நாளாந்தம் 3 அல்லது 4 அப்பாவி பொதுமக்கள் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதியில் படுகொலை செய்யப் பட்டு வருகின்றனர்.

இராணுவ முகாமுக்கு வெளியே அமைந்...

...ரைம் ஏசியா சஞ்சிகைக்கு அவர் அளித்த நேர்காணலிலேயே இதனைத் தெரிவித்துள்ளார். இராணுவத்தில் உள்ள வெறிபிடித்த சக்திகள் தான் தாக்குதலை மேற்கொள்வதாக நாம் எண்ண வேண்டியதில்லை. இராணுவத்தின் கட்டமைப்பே அப்படியானதாகத் தான் இருக்கிறது ஜனாதிபதிப்பதவியை மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர் கடும்போக்...

...உள்ளது. அமைதி முயற்சிகளில் ஈடுபடுவதாக ஒருபுறம் கூறிக்கொண்டு மறுபுறம் பகிரங்கமாக தமிழ் மக்கள் மீது ஒடுக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிடுகிறது அரசாங்கம் என்றார்.

கிளைமோர்த் தாக்தாக்குதலை புலிகளே மேற் கொள்வதாக கூறப்படுகிறது இத்தகைய தாக்குதல்களை நடத்த வேண்டிய தேவை...

வருகின்றனர்.

இராணுவ முகாமுக்கு வெளியே அமைந் திருக்கிற இலங்கை போர் நிறுத்த கண் காணிப்புக் குழுவினரது அலுவலகம் கூட தாக்குதலுக்குள்ளாகிறது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

இருக்கிறது ஜனாதிபதிப்பதவியை மகிந்த ராஜபக்ஷ பொறுப்பேற்ற பின்னர் கடும்போக் காளர் களையே இராணுவத்திற்கு நியமித்தார்.

அவர்கள் கடும்போக்காளர்களாகவே கடந்த காலங்களிலும் செயற்பட்டார்கள் என் பது வரலாறு. இராணுவத்தின் மேல் நிலையி லிருந்து இந்தக் கடும்போக்குத் தன்மைதான்

மேற் கொள்வதாக கூறப்படுகிறது இத்தகைய தாக்குதல்களை நடத்த வேண்டிய தேவை எமக்கு இல்லை. 1983 ஆம் ஆண்டு முதல் 2001 ஆம் ஆண்டு சிறிலங்கா இராணுவத் துடன் நடத்தப்பட்ட அனைத்துச் சமர்களுமே எமது மக்களின் முழு பங்கேற்புடன்தான் நடந்தது. (12 ஆம் பக்கம் பார்க்க)

விகாராதிபதி வண.அம்பிட்டிய சுமணரத்தின தேரோ விகாரைக்கு முன்பாக நேற்றுக் காலை 9.30 மணிக்கு சாகும் வரையிலான உண் ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளார்.

தேவஸ்தானங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி கள் மற்றும் தர்மசாலை மண்டபம் அமைப் பதில் ஏற்பட்ட (12 ஆம் பக்கம் பார்க்க)

# நாடாளுமன்ற செயற்பாடுகளை புறக்கணிக்க கூட்டமைப்பு முடிவு

(கொழும்பு)

நாடாளுமன்ற அமர்வுகளைப் புறக்கணிக் கப் போவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா அறிவித்துள்ளார்.

வடக்கு–கிழக்கில் தொடரும் வன்முறை களுக்கு எதிரான எமது ஒரு போராட்டத்தின் ஒரு பகுதியாக இன்று செவ்வாய்க்கிழமை தொடங்க உள்ள நாடாளுமன்ற அமர்வில் பங்கேற்காமல் புறக்கணிக்க உள்ளோம்.

அரசாங்கத்தின் அவசரகால சட்ட நீடிப் பின் மீதும் இன்று விவாதம் நடைபெறவுள் ளது. இராணுவ ஆக்கிரமிப்புத் தமிழர் தாய கப் பகுதியில் தொடரும் படுகொலைகள், கடத்தல் சம்பவங்களுக்குக் கண்டனம் தெரி வித்து கடந்த பெப்ரவரி முதலாந்திகதி நடை பெற்ற நாடாளுமன்ற கூட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் வெளிநடப்பு செய் தனர்.

முன்னைய அமர்வுகளிலும் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்களை நடத்தி தங்களது எதிர்ப் புக்களை கூட்டமைப்பினர் வெளிப்படுத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. இதேவேளை ஜெனீவாவில் அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையேபேச்சுவார்த்தை ஆரம் பமாக இருப்பதால் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தர்சினி கொலை வழக்கு

# விசாரணை நடாத்தி அறிக்கை தருமாறு சி.ஐ.டியினருக்கு நீதிவான் நேற்று உத்தரவு

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவில் பாலியல் வல்லுறவுக்குட் படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட இ.தர்ஷினி கொலை வழக்கில் கண்டெடுக்கப்பட்ட தொப்பி தொடர்பான விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு ஊர்காவற்றுறை பதில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் குற்றப் புலனாய்வுப்பிரிவின் கொழும்பில் உள்ள தலைமையகத்திற்கு உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பான வழக்கு ஊர்காவற் றுறை நீதிமன்றில் பதில் நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் நேற்று விசா ரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. தர்சினி யின் பெற்றோர் சார்பில் ஆஜரான மனித உரிமைகளுக்கான சட்டத்தரணி ரெமெடிஸ் சம்பவ இடத்திலிருந்து கண்டெடுக்கப்பட்ட குறிப்பிட்ட தொப்பி தொடர்பாக நீதிபதியின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

தர்சினியை சிறிலங்கா சிப்பாய்தான் பாலியல் வல்லுறவுக்குள்ளாக்கி படுகொலை செய்துள்ளார் என்று உறுதியாக சந்தேகிப் பதாகவும் இந்த வழக்கை விசாரித்த குற்றப் புலனாய்வுப் பிரிவினர் முறையான விசார ணையை நடத் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
your friend in the skies...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

# பதுங்கு குழிக் காய்ச்சல் எனப்படும் தைபஸ் காய்ச்சல்

*கேள்வி:-* தற்போது யாழ்ப்பாணத்தில் பல தைபஸ் நோயாளிகள் இனம் காணப்பட்டுள்ளனர். இந்நோய் எதனால் ஏற்



படுகின்றது?

*பதில்:-* றிக்கட்சியே எனும் பக்றீரியாவிற்கும் வைரசிற்கும் இடைப்பட்ட நுண்ணங்கியால் ஏற்படுகின்றது.

*கேள்வி:-* தைபஸ் கிருமி எங்கு காணப்படுகின்றது?

*பதில்:-* இவை பேன், தெள்ளு, உண்ணி போன்ற பூச்சியினங்களின் உணவுக்கால்வாயில் சாதாரணமாக அவற்றிற்குத் தீங்கு விளைவிக்காமல் உயிர் வாழலாம். அவற்றின் எச்சத்தின் மூலம் பரப்பப்பட்டு, உடலில் ஏற்படும் சிறு காயங்கள் மூலம் மனித உடலில் தொற்றும்.

*கேள்வி:-* நோய் அறிகுறிகள் யாவை?

பதில்:- நோய்க்கிருமி தொற்றிய உடலின் பகுதியில் கரும் தழும்பு காணப்படும். காய்ச்சல் ஏற்படும். தலையிடி, உடல் பலவீனம், இருமல் என்பன இருக்கலாம். 5-7 நாளில் உடலில் செந்நிறப் புள்ளிகள் தோன்றும்

## மருத்துவ விளக்கம்

நிணநீர்கணுக்கள் வீங்கலாம். காய்ச்சல் 12-18 நாட்களிற்கு இருக்கும்.

*கேள்வி:-* தற்போது பரவிய தைபஸ் நோய்க்குரிய காரணம்

**இரண்டாவது உலகப் போரின் போது பதுங்கி குழிகளில் வாழந்த இராணுவ வீரர்களின் ஆடைகளில் தொற்றிய தெள்ளினால் ஏற்பட்ட தைபஸ் காய்ச்சல் பலரைப் பலி கொண்டதால் இது பதுங்கு குழிக் காய்ச்சல் என்று அழைக்கப்படுகிறது. யுத்தச் சூழல், இடப்பெயர்வுத அகதி முகாம் வாழ்க்கை என்பவற்றால் மக் கள் சுகாதார விதிகளுக்குட்பட்டு வாழ முடியாத சூழ்நிலையில் பேன், தெள்ளு, உண்ணி போன்றவற்றால் இந்நோய் பரவக் கூடியதாக இருக்கிறது.**

யாது?

*பதில்:-* பற்றைகளில் உள்ள தெள்ளு தொற்றலால் ஏற்பட்டது. மேலும் வீட்டுப் பிராணிகளின் தெள்ளுத் தொற்றலும் காரணமாகும்.

*கேள்வி:-* தைபசு நோயைக் கட்டுப்படுத்த வீட்டில் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவை.

*பதில்:-* தெள்ளு, உண்ணி என்பவற்றினை கட்டுப்படுத்துவதால் பொதுவாக வீட்டுப்பிராணிகளில் இருந்து தொற்றல் ஏற்படுவதைத் தடுக்கலாம். இதற்கு மலத்தியோன் விசிறல் மேற்கொள்ளலாம்.

*கேள்வி:-* பற்றைகள், விவசாய விளை நிலங்களிலிருந்து தெள்ளு, உண்ணி தொற்றலை எவ்வாறு தடுக்கலாம்?

*பதில்:-* பற்றைக்ள் வெட்டும் போது, உண்ணி உடலில் தொற்றாது அவதானிக்க வேண்டும். இதற்கென விசேட கிருமி நாசிகளையும் தெளிக்கவேண்டும்.

*கேள்வி:-* எலிகளின் பெருக்கம் தைபஸ்நோயினை ஏற்படுத்துமா?

*பதில்:-* ஆம், எலிகளில் உள்ள தொற்றுக்கள் தைபஸ் நோய்க்காவிகளாக அமையலாம்.

*கேள்வி:-* தைபஸ் நோக்கு சிகிச்சை யாது?

பதில்:- வைத்தியரின் ஆலோசனைப்படி DOXYCYCINE 200 Mg தினமும் கொடுப்பதால் 5 நாட்களினுள் குணமடையும் தைபஸ் நோய்.

*கேள்வி:-* பதுங்கு குழிக்காய்ச்சல் என அழைக்கப்பட காரணம் யாது?

*பதில்:-* இரண்டாம் உலகப் போரில், பதுங்குகழிகளில் வாழ்ந்த இராணுவத்தினரின் ஆடைகளில் தெள்ளுத் தொற்றி அவற்றின் மூலம் ஏற்பட்ட தைபஸ் காய்ச்சல் பலரைப் பலிகொண்டது. இத

**டாக்டர் சி.யமுனாநந்தா**

னால் இதனை அவ்வாறு அழைத்தனர்.

*கேள்வி:-* தைபஸ் நோய் பரவ உள்ள பாதகமான சமூகச் சூழல் யாது?

*பதில்:-* யுத்தச் சூழல், இடம் பெயர்வு, அகதிமுகாம் வாழ்க்கை என்பன தைபஸ் நோய் பரம்பலில் தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

## நிரந்தர உத்தியோகத்தரை நியமிக்க கோரிக்கை

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில் நிரந்தரப் பெரும்பாக உத்தியோகத்தர் இல்லாமையினால் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக உடுவில் பகுதி விவசாய சம்மேளனத்தினரால் உடுவில் பிரதேச செயலாளரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

உடுவில் கமநல சேவைகள் நிலையத்தில்தற்போதுகடமையாற்றும் உத்தியோகத்தர் கீரிமலை, தொல்புரம் ஆகிய கமநல சேவைகள் நிலையங்களிலும் கடமையாற்றி வருகின்றார் என்பதும் குறிப்பிடத்தக் கது. (கு-122)

## பொதுக் கூட்டம்

திருநெல்வேலி இந்துமயான சபையின் புதிய நிர்வாகசபையைத் தெரிவு செய்வதற்கான பொதுக் கூட்டம் எதிர்வரும் 18 ஆம்திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு திருநெல்வேலி இந்துவாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெறுமெனவும் அக்கூட்டத்துக்கு மயானத்தைப் பயன் படுத்தும் அனைத்துப் பொது மக்களையும் வருகைதருமாறும் நல்லூர் பிரதேச வரியிறுப்பாளர் சங்கம் கேட்டுக்கொண்டுள்ளது. (து)

## 1965ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆவணங்களை அழிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1965ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற க. பொ.த.சாதாரண, உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் மற்றும் ஆவணங்கள் என்பன அழிக்கப்படவிருப்பதாக அறிவித்துள்ள பரீட்சைத் திணைக்களம், இவற்றை தேவைப் படுவோர் மார்ச் மாதம் 31ஆம் திகதிக்கு முன்பு பெற்றுக்கொள்ளும்படி தெரிவித்துள்ளது.

மேற்படி பரீட்சைகளின் பெறுபேறுகள் பல வருடங்களாக பரீட்சைத் திணைக்களத்தில் வைக்கப் பட்டுள்ளதால், அங்கு இட நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் 1965ஆம்ஆண்டுக்கு முன்பு உள்ள பெறுபேறுகளை அழிக்க முற்பட்ட பரீட்சைத்திணைக்களம் இது பற்றி சகல அரசதிணைக் களங்களுக்கும் அறிவித்துள்ளது. (கு-7)

## இராசி பலன்

**14.02.2006**
**(.02, செவ்வாய்க்கிழமை)**
**பிரதமை பிற்பகல் 1.00மணிவரை**
**மகம் பிற்பகல் 12.39**
**இராகுகாலம் 3.33-5.03மணிவரை**
**சுபநேரம் 11.03-12.33 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | கட்டுப்பாடு, பித்தரோகம், முயற்சி தாமதம், எதிர்பாராத செலவு. |
| இடபம் | அபகீர்த்தி, காரியதாமதம், நண்பர்கள் விரோதம், பணக்குறைவு. |
| மிதுனம் | சென்ற இடத்தில் செல்வாக்கு, புதிய தகவல், போசன சுகம், கலந்துரையாடல். |
| கடகம் | சுபநிகழ்வு, காரிய அனுகூலம், தொழில் நன்மை, நல்ல செய்தியறிதல். |
| சிங்கம் | ஆரோக்கியக்குறைவு, முயற்சி தாமதம், பொருள்விரயம், மனச்சஞ்சலம். |
| கன்னி | வாக்குமேன்மை, சுபசெலவு, குடும்பசுகம், ரோகநிலை. |
| துலாம் | இனியசம்பவம், அன்னியர் சந்திப்பு, காரிய சித்தி, தனவரவு. |
| விருச்சிகம் | செல்வாக்கு, குடும்பக்கவலை, முயற்சி தாமதம், விருந்துபசாரம். |
| தனுசு | ஆழ்ந்தசிந்தை, மாதர் நட்பு, தொழில் நன்மை, புதிய முயற்சி. |
| மகரம் | உறவினர் மனஸ்தாபம், பிரயாணம், சயனசுகக்குறைவு, முயற்சி தாமதம். |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, கீர்த்தி, தடைப்பட்ட காரியம் கைகூடும், சகோதரர் உதவி. |
| மீனம் | அதிகாரம், சுபநிகழ்வு, எடுத்த காரியம் கைகூடும், உற்சாகம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

## கரையோர பிரதேசங்களில் கடற்படையினர் தேடுதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டின் கரையோரப் பிரதேசங்களில் பாதுகாப்பை பலப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டுள்ள கடற்படையினர் கரையோரங்களை அண்டிய கிராமப் புறங்களில் தீவிர தேடுதல்களையும் நடத்தி வருகின்றனர். குறிப்பாக தென்மராட்சி, வலிகாமம் மற்றும் வடமராட்சிப் பகுதிகளிலேயே இத்தகைய தேடுதல்கள் இடம் பெற்று வருகின்றன.

தென்மராட்சியில்தனங்கிளப்பு, கச்சாய் பகுதி கரையோரங்களிலும்வலிகாமத்தில்சுழிபுரம், மாதகல், காரைநகர் பகுதிகளிலும் கடற்படையினர் இத்தகைய தேடுதல்களை திடீர் திடீரென மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை கடந்த ஒருவாரமாக மீன்பிடிக்கச் செல்லும் மீனவர்கள் மீது இப்பகுதியில் நிலை கொண்டுள்ள கடற்படையினர் கரையோரங்களிலும், கடலிலும் கெடுபிடிகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட மீனவர்கள் தமது மீனவ சங்கங்களிடம் முறைப்பாடு செய்துள்ளனர். குறிப்பாக தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு படையினர் அண்மைக் காலமாக புதிய நடைமுறைகளைக் கையாண்டு, அவர்கள் தொழிலில் ஈடுபடுவதற்கு இடையூறுகளை ஏற்படுத்துவதாகவும் இத்தகைய கெடுபிடிகள் மாதல், சுழிபுரம் கடற் பகுதிகளில் அதிகமாக இடம் பெறுவதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள் ளது. (கு-7)

## 1965ஆம் ஆண்டுக்கு முற்பட்ட ஆவணங்களை அழிக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

1965ஆம் ஆண்டுக்கு முன்பு நடைபெற்ற க. பொ.த.சாதாரண, உயர்தரம் ஆகிய பரீட்சைகளின் பெறுபேறுகள் மற்றும் ஆவணங் கள் என்பன அழிக்கப்படவிருப் பதாக அறிவித்துள்ள பரீட்சைத் திணைக்களம், இவற்றை தேவைப் படுவோர் மார்ச் மாதம் 31ஆம் திக திக்கு முன்பு பெற்றுக்கொள்ளும் படி தெரிவித்துள்ளது.

மேற்படி பரீட்சைகளின் பெறு பேறுகள் பல வருடங்களாக பரீட் சைத்திணைக்களத்தில் வைக்கப் பட்டுள்ளதால், அங்கு இட நெருக் கடி ஏற்பட்டுள்ளது.

இதனால் 1965ஆம் ஆண்டுக்கு முன்பு உள்ள பெறுபேறுகளை அழிக்க முற்பட்ட பரீட்சைத் திணைக் களம் இது பற்றி சகல அரச திணைக் களங்களுக்கும் அறிவித்துள்ளது. (கு-7)

## உழவு இயந்திரம் தடம்புரண்டதில் நால்வர் படுகாயம்



(யாழ்ப்பாணம்)

நெல்அறுவடையில் ஈடுபட்டு விட்டுவீடு திரும்பிக்கொண்டிருந்த உழவு இயந்திரம் தடம் புரண்டதில் அதில் பயணம் செய்த 4 பெண்கள் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று மதியம் 1 மணியளவில் தச்சன் தோப்புப்பகுதியில் இடம்பெற்றது. இச் சம்பவத்தில் கைதடியில் வசித்துவரும் நி.புவனேஸ்வரி (வயது-40), ர.தனலட்சுமி (வயது-39), வ.மகாலட்சுமி (வயது -35), ப.பூரணம் (வயது-58) ஆகிய நான்கு பெண்களுமே காயமடைந்தவர்கள் ஆவார். (கு-132,133)

## சர்வதேச அணுசக்திசபைக் கூட்டத்தில்

# இலங்கை அரசு வாக்களிப்பு ஈரான் கடும் அதிருப்தி!

(கொழும்பு)

ஒஸ்ரிய தலைநகர் குறித்து வியன்னாவில் நடைபெற்ற சர்வதேச அணுசக்தி சபையின் கூட்டத்தில் இலங்கை ஈரானுக்கு எதிராக வாக்களித்திருப்பதில் அந் நாடு கடுமையாக அதிருப்தியடைந்துள் ளது.

தமது அதிருப்தியை கொழும்பில் உள்ள தூதரகத்தின் மூலம் இலங்கை அரசாங்கத்துக்கும் தெரியப்படுத்தியுள்ளது. வியன்னா மாநாட்டில் இந்தியா இலங்கை உள்ளிட்ட 27 நாடுகள் அமெரிக்கா அணியில் நின்று ஈரானுக்கு எதிராக வாக்களித்தன. கியூபா, சிரியா, வெனிசூலா ஆகிய நாடுகள் ஈரானை ஆதரித்தன. தென்னாபிரிக்கா உள்ளிட்ட 5 ஆபிரிக்கா நாடுகள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த இலங்கை வெளிவிவகார அமைச்சுப் பேச்சாளர் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் கவனத்துக்குத்தான் இந்த விவகாரம் கொண்டுசெல்லப்பட்டுள்ளதே தவிர, ஈரான் மீதான தடைக்கான தீர்மானம் இது அல்ல என்று விளக்கம் அளித்தார்.

இலங்கை கடந்த ஆண்டு 150 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவியை ஈரான் வழங்கியிருப்பது குறிப்பிடத்தக்கது. அமெரிக்காவின் பிரதிநிதி நிக்கலஸ் பேர்ன்சி அண்மைய இலங்கை பயணத்தின் போது அமெரிக்கா ஆதரவு நிலைப்பாடு மேற்கொள்ள அழுத்தம் கொடுக்கப்பட்டதாகவும் இந்த நிலைப் பாட்டை மேற்கொள்வதற்காக பாரிய கடனுதவிகளை அளிக்க முன்வந்துள்ளதாகவும் கூறப் படுகிறது.

நிக்கலஸ் பேர்ன்சும் கொழும்பு ஊடகவியலாளர் மாநாட்டில் இலங்கைகான கடனுதவித்திட்டங்கள் மற்றும் இராணுவ உதவிகள் பற்றி அறிவித்ததையும் கொழும்பு அரசியல் நோக்கர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதற்கு முன்னதாக அமெரிக்கா சென்ற மங்கள சமரவீர அந்நாட்டு அமைச்சர் கொண்டலீசா றைசுடானன சந்திப்பின் போதும் அமெரிக்கா தரப்பில் இத் தகைய அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

இந் நிலையில் ஈரானை விட அமெரிக்கா கூடுதலான கடனுதவி மற்றும் இராணுவ உதவி அளிக்க முன்வந்தமையால் தான் அமெரிக்கா அணிக்கு இலங்கை தாவியது என்றும் கொழும்பு கொள்கை வகுப்பாளர்கள் சிலர் கூறுகின்றனர். (க)

## 7 ஆவது மாடியில் இருந்து விழுந்த ஒருவர் மரணம்

(கொழும்பு)

புறக்கோட்டையில் உள்ள கட்டடம் ஒன்றில் இருந்து கீழே விழுந்து ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினமிரவு 11 மணியளவில் இவர் கீழே விழுந்ததாக புறக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

நிர்மாணிக்கப்பட்டு வருகின்ற கட்டடமொன்றில் தொழில் செய்து வந்த ஊழியர் ஒருவர் ஏழாவது மாடியில் இருந்து கீழே விழுந்து உயிரிழந்திருப்பதாகவும் இவ்வாறு உயிரிழ்ந்தவர் ராகலைப் பகுதியைச் சேர்ந்தவர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (க-7)

## பேருந்து சேவை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பண்ணை மார்பு நோய் வைத்தியசாலைக்கு செல்லும் நோயாளர்களின் வசதி கருதி நாளை புதன்கிழமை தொடக்கம் காலை 9 மணிக்கு யாழ். மத்திய பேருந்து நிலையத்திலிருந்து பண் ணை மார்பு நோய் வைத்திய சாலைக்கு ஒரு சேவையும் மதியம் 12 மணிக்கு நோயாளர் திரும்பி வருவதற்கான பேருந்து சேவையும் ஆரம்பிக்கப்படுமென பொதுமக்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (க)

## கௌரவிப்பு விழா

யாழ் ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வங்கியில் யாழ். மாவட்டத்தில் உள்ள இலங்கை வங்கிகளில் பணியாற்றி 2005 ஆம் ஆண்டு ஓய்வு பெற்ற 10 பேரை கௌரவிக்கும் விழா நேற்று முன்தினம் நடை பெற்றது. இலங்கை வங்கியின் விளை யாட்டு நலன்புரி அமைப்பு இன் நிகழ்வினை ஒழுங்கு செய்திருந்தது.

இலங்கை வங்கியின் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் கே. பாலசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் ஓய்வு பெற்ற என். சிவராஜா, எஸ். குலசிங்கம், எம். மகாதேவா, ஆர். ராஜேந்திரா, ஆர். விஜயரட்ணம், [illegible]. குகபாஸ்கரன் ஆகியோர் குடும்ப சகிதமும் திருமதி எம். சிற்சபேசன் திருமதி ஆர் துரைராஜா திருமதி கே. சிவபாலன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். இவர்களுக்கு சேவைக் காலமும் பெயரும் பொறிக்கப்பட்ட குத்துவிளக்கு வழங்கப்பட்டது. (க-132,133)

## கட்டாக்காலிகளின் தொல்லைகள் நீங்கும்?

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கட்டாக்காலிகளாக திரியும் ஆடு, மாடுகளை அழிப்ப தற்கு உள்ளூராட்சி ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவிக்கப்படு கின்றது.

வடக்கு கிழக்கில் உள்ள பிர தேச சபை, நகரசபை, மாநகரசபை ஆகியவற்றின் ஊடாக கட்டாக்காலி களாக திரியும் ஆடு மற்றும் மாடுகள் அழிக் கப் படும் எனவும் கூறப்படுகின்றது.

இதேவேளை, கட்டாக் காலிகளாக திரியும் நாய்களையும் நஞ்சூட்டி அழிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப் படுகின்றது. (க)

## சென்னை எம்.ஜி.ஆர். நகரில்

# ஈழத்தமிழர்கள் மீதான அமெரிக்காவின் அத்துமீறலைக் கண்டித்து பொதுக்கூட்டம்

(கொழும்பு)

ஈழத் தமிழர்கள் மீதான அமெரிக்காவின் அத்துமீறலைக் கண்டித்து தமிழகத்தின் சென்னையில் எதிர்வரும் 19 ஆம் திகதி பொதுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் சென்னை எம்.ஜி.ஆர் நகரில் இந்தப் பொதுக் கூட்டம் நடைபெறவுள் ளது.

தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் தலைவர் கொளத்தூர் தா.செ.மணி இந்தப் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கவுள்ளார்.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் விடு தலைச் சிறுத்தைகள் இயக்கம் பொதுச் செயலாளர் தொல் திருமாமளவன், தந்தை பெரியார் திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பாட்டாளி மக்கள், கட்சி துணைத் தலைவர் பாஸ்கரன் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் அரசியல் ஆய்வு மண்டல உறுப்பினர் மு.செந்திலதிபரன், சீமான் உள்ளிட்டோர் கண்டன உரையாற்றுகின்றனர்.

பொதுக்கூட்டத்தையொட்டி பாசறைப்பாணர் தேனிசைசெல்லப் பாவின் இன எழுச்சி இசை முழக்க நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (க)


## நீளும் நினைவுகளில் வாழும் உறவு



## அமரர் நல்லதம்பி துரைராஜா

அதிகம் கதையாமல்
அதிர்ந்து பேசாமல்
பொறுமை மீறாமல்
அன்பு குறையாமல் வாழ்ந்த
எங்கள் அன்புத் தந்தை

அமரர்

நல்லதம்பி துரைராஜா

அவர்கள் காலமாகிய போது
எங்கள் சோகத்தில் பங்கு
கொண்ட அனைத்து
நெஞ்சங்களுக்கும் எங்கள்
மனமார்ந்த நன்றிகள்

அன்புடையீர்!

கடந்த 14ஆம் நாள் சனிக்கிழமை 2006 அன்று எங்கள் அன்புத் தந்தை அமரத்துவமடைந்த சேதியறிந்து எம்மோடு துயரத்தில் துணை நின்றது போல் அன்னாரின் ஆத்மசாந்தி பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

குடும்பத்தினர்.

இல. 69 பாத்திமா வீதி, திருகோணமலை.
தொ.பே. 0262224371
0262221712

(C/203)


## வன்னி மாவட்டத்தில்

# வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை முன்னிட்டு இது வரை வன்னிமாவட்டத்தில் வேட்பு மனுக்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லையென மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் எ.கருணாநிதி தெரிவித்தார்.

எனினும் முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் அரசியல் கட்சிகள் முகவர்களை நியமித்துள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இலங்கை தமிழரசுக்கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன முகவர்களை நியமித்துள்ளதாக உதவித் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மன்னார், வவுனியா மாவட்டங்களில் இலங்கை தமிழரசுக்கட்சி, ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி, ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு, ஐக்கிய தேசியக்கட்சி , ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸ் உட்பட 7 அரசியல் கட் சிகள் முகவர்களை நியமித்துள்ளது.

பெரும்பாலும் இன்று முதல் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படலாமென எதிர்பார்ப்பதாக உதவித்தேர்தல் ஆணையாளர் மேலும் தெரிவித்துள்ளார். (த-9)

## அரச குழுவிற்கு பயிற்சியளிக்கும் ஹவார்ட் நிபுணர்கள் விடுதலைப் புலிகளுக்கு சார்பானவர்களாம் அரச ஊடகம்

(கொழும்பு)

ஜெனீவா பேச்சில் கலந்து கொள்ளும் அரச தரப்பு பேச்சுக் குழுவிற்கு பயிற்சி அளிப்பதற்காக அரசினால் அழைக்கப்பட்ட அமெரிக்க ஹவார்ட் நிபுணர்கள் இருவரும் விடுதலைப் புலிகளிற்குச் சார்பானவர்கள் என அரச ஊடகமொன்று தெரிவித்துள்ளது. விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளை குறித்த இரு நிபுணர்களின் கருத்துக்கள் நியாயப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதாக அந்த ஊடகம் விசனம் வெளியிட்டுள்ளது.

ஹவார்ட் நிறுவனத்தைச் சேர்ந்த இரு நிபுணர்கள் அரசின் அழைப்பையடுத்து கடந்த சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் அரச பேச்சுக்குழுவிற்கு பயிற்சிகளை வழங்கியிருந்தனர்.

இந்நிலையிலேயே விடுதலைப் புலிகளின் நிலைப்பாடுகளை இந்த நிபுணர்கள் நியாயப்படுத்தும் விதமாக கருத்துத் தெரிவித்ததாக அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

அரச ஊடகத்தின் இந்தச் செய்தியால் அரசாங்க அமைச்சர்கள் பலர் குழப்பம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (க)

## இன்று ஒரு தகவல்

# குழந்தைகள் கவனம்

ஒருவர் மிகவும் அவசரமாகப் போய்க் கொண்டிருந்தார். "எங்கே சார் போகிறீர்கள்?" என்று கேட்டேன். "எனக்கு வேண்டப்பட்ட ஒருவருக்கு குழந்தை பிறந்திருப்பதாக அறிந்தேன். அதுதான் ஆஸ்பத்திரிக்குப் போய்ப் பார்க்கலாம் என்று போகிறேன்" என்றார். "அப்படியென்றால் கொஞ்சநேரம் இப்படி உட்காருங்கள் சார். சில விபரங்களைக் கூறுகிறேன். கேட்டுக்கொண்டு போங்கள்" என்றேன். உட்கார்ந்தார். சொல்ல ஆரம்பித்தேன்.

புதிதாகப் பிறந்திருக்கும் ஒரு குழந்தையைப் பார்க்கப் போவதென்றால் அது சாதாரண விடயமில்லை. அதில் மிகவும் கவனமாக நடந்துகொள்ள வேண்டும். புதிய குழந்தைக்கு நோய்கள் சுலபமாகத் தொற்றும். முக்கியமாக காற்றின் மூலம் பரவும் நோய்கள் சுலபமாக தொற்றும். அதனால் நமக்கு உடல்நிலை சரியில்லை என்றால் குழந்தையை விட்டு கொஞ்சம் தள்ளியிருப்பது நல்லது.

பெரியவர்களைப பொறுத்தவரை சாதாரணமாக உள்ள ஒரு கிருமி கூட குழந்தைக்கு மிகவும் மோசமான கிருமியாக இருககும். சில வெளிநாடுகளில் எப்படி தெரியுமா? பிறந்த குழநதை தூங்கிக் கொண்டிருக்கும் ஒரு அறைக்குப் போக வேண்டும் என்றால் போகிறவர்கள் முகமூடி போட்டுக் கொள்ள வேண்டும். காலணிகளை மாற்ற வேண்டும். அவ்வளவு சுத்தமாக உள்ளே போய் பார்த்துவிட்டு வரவேண்டும்.

பொதுவாக சில ஆஸ்பத்திரிகளில் பார்வையாளர்கள் நேரத்தில் தாயை விட்டுக் குழந்தையை தனியாகப் பிரித்து விடுவார்கள். எதற்கு தெரியுமா? அந்த நேரம் பலபேர் வருவார்கள் போவார்கள். அவர்களின் கை,கால்கள் சுத்தமாக இருக்காது. சுத்தம் இல்லாத கைகள் மூலம் கிருமிகள் பரவும். சுத்தம் இல்லாத கையென்றால் மண், தூசு படிந்திருக்கும் கை மட்டும் தான் என்று அர்த்தமில்லை. சாலையில் கையை வீசிக்கொண்டு நடந்து வருகிறீர்கள். குழந்தையைப் பொறுத்தவரையில் அது கூட சுத்தமில்லாத கைதான்.

தாயைத் தவிர மற்றவர்கள் குழந்தையை தூக்காமல் பார்த்துக்கொள்வது நல்லது. தாய்கூட அளவோடு கொஞ்ச வேண்டும். புதிதாக ஒரு குழந்தையை பிரசவித்திருக்கும் பெண்ணிடம் மற்ற தாய்மார்கள் ஏதாவது சொல்லிக் கொண்டேயிருப்பார்கள். குழந்தையை அப்படி வளர்க்கவேண்டும் இப்படி வளர்க்க வேண்டும் என்று ஏதாவது புத்திமதி சொல்லிக் கொண்டே இருப்பார்கள். இது அந்தப் பெண்ணைக் குழப்பி விட்டுவிடும். அதனால் அப்படியெல்லாம் செய்யக்கூடாது. அந்தப் பெண்ணே ஏதாவது கேட்டால் கூட மருத்துவர் கூற வேண்டிய விபரங்களையெல்லாம் நாமே சொல்லிக் கொண்டிருக்கக்கூடாது.

புதிதாகப் பிறந்திருக்கும் குழந்தையை மட்டுமல்ல... ஒரு நோயாளி குழந்தையைப் பார்க்கப் போவதென்றால் கூட மிகுந்த எச்சரிக்கையோடு நடந்துகொள்ள வேண்டும். ஒரு தின்பண்டமோ...விளையாட்டுப் பொருளோ அந்தக் குழந்தைக்கு நாம் வாங்கிக்கொண்டு செல்வதாக வைத்துக்கொள்வோம் அதை நேராகக் கொண்டுபோய் அந்தக் குழந்தையிடம் கொடுக்கக் கூடாது. அதன பெற்றோரிடம இரகசியமாகக் கொடுங்கள. அவர்கள் குழந்தையிடம் கொடுககலாமா... வேண்டாமா என்பதை முடிவு செய்யட்டும். அவர்களுக்குத் தான் தெரியும் அதன் மனமும் உடம்பும்.

உங்கள் அக்கறையைக் காட்டுவதாக நினைத்துக் கொண்டு குழந்தையின் வாயில் எதையும் கொண்டு போய போடாதீர்கள். போகும் போது உங்கள் வீட்டுக் குழந்தையை அழைத்துச்செல்லாதீர்கள். இது நோயை வாங்கிக் கொண்டு வரும் அல்லது புதிதாக ஒரு நோயை அதனிடம கொடுத்து விட்டு வரும்.

என்னதான் உங்களுக்கு பழக்கமான குழந்தையாக இருந்தாலும் கூட அதற்கு விருப்பம் இல்லாவிட்டால் பேசாதீர்கள். அங்கே போய் அதன் பாடசாலையைப் பற்றி ஞாபகப்படுத்தாதீர்கள். நோயில் இருக்கும்போது பாடசாலையைப பற்றி பேச விரும்பாது பிள்ளை. மருத்துவமனையை விட்டுப் போகும போது பிள்ளையிடம் சொல்லவேண்டிய அவசியம் இல்லை. அதன் பெறறோரிடம் சொல்லிவிட்டுப் புறப்படுங்கள். நம்மிடம் சொல்லவில்லையே என்று பிள்ளை யோசிக்காது. சமூக சம்பிரதாயத்தைப் பற்றி அது கவலைப்படுவதில்லை. இப்படி எல்லா வபரம் என் எதிரில் உட்கார்ந்திருந்தவரிடம கூறி முடித்தேன. "மிக்க நன்றி சார்" என்று கூறிவிட்டு அவர் புறப்பட்டார். பிள்ளைகள் கொஞ்சம் வளரும் வரைக்கும் தான நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும் என்றில்லை. வளர்ந்த பின் இன்னும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும. ஒரு சிறுவன் பள்ளிக்கூடத்தில் இருந்து வீட்டுக்குத் திருமபி வநதான். முகம் முழுவதும் நகத்தால் கீறியிருந்தது. அப்பா பார்த்ததும் பயந்துவிட்டார் "உன்னை யார் இப்படிச் செய்தது?" என்று கேட்டார. "எனனுடன் கூடப்படிக்கும் பையன்" என்றான மகன்.

மகனே நாளைக்கு உன்னுடன் பள்ளிக்கூடம் வருகிறேன் நீ எனக்கு அவனை அடையாளம்காட்டுகிறாயா? என்றார் அப்பா. "அது மிகவும் சுலபம்" என்றான் மகன. 'எப்படி?' என்றார் அப்பா. "அவனது காது ஒன்றை நான் கொண்டு வந்திருக்கிறேன்" என்றான் மகன்.

# எமது உள்ளத்து உணர்வுகளை கலைகள் மூலம் வெளிப்படுத்த முடியும்

(கிளிநொச்சி)

எமது உள்ளத்து உணவுகளை கலைகள் மூலம் வெளிப்படுத்த முடியும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் கா. வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மாணவியும், நடன கலாவித்தகர் சாம்பவி கண்ணதாசனின் மாணவியுமான தவரட்ணம் ஜெய ரஞ்சினியின் நடன அரங்கேற்ற விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

விடுதலைப் போராட்டத்தின் இன்றைய கால கட்டத்தில் இவ்வாறான அரங்கேற்றங்கள் எம்மை நன்றாக சிந்திக்க வைப்பதற்கு மிக முக்கிய பங்காற்றி வருகின்றன.

தமிழ் மக்கள் தமது உணர்வுகளை இவ்வாறான அம்பலத்தில் ஆடுதல் மூலம் வெளிப்படுத்த முடியும். புதிய கலைப்பொழுதை இதன் பின்னணியில் உள்ள அனைவரும் திறமையாக செயற்படுத்த வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.15மணிக்கு ஓய்வு பெற்ற அதிபர் திருமதி. குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த அரங்கேற்ற நிகழ்வில் தமிழீழத் தேசியக் கொடியை, தமிழீழ நீதி நிர்வாகத் துறை பொறுப்பாளர் பரா ஏற்றி வைத்தார். தொடர்ந்து விழாச் சுடரினை கலா வித்தகர்கள் துவிசார் பொறுப்பாளர்கள் ஏற்றி வைத்தனர்.

சலங்கைப் பூசையை புதுக் குடியிருப்பு சிவன் ஆலயக் குருக்கள் நிகழ்த்தினார். ஆசியுரைகளை ஆனந்தபுரம் கிருஷ்ணர் ஆலயக்குருக்கள் ராமசாமி, தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி, கலாசேத்திர சாந்தினி சிவநேசன், முள்ளியவளை பிரதி கல்விப் பணிப் பாளர் நாகரட்ணம், பிரதித்ப்பணிப்பாளர் பேரின்பநாயகம் ஆகி யோர் நிகழ்த்தினர்.

நிகழ்வின் சிறப்புரைகளை கா.வே.பாலகுமாரனும் கரக சூடா மணி பேரின்பநாயகம் சிவகுருவும் நிகழ்த்தியமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# ஜெனீவா பேச்சுக்கள் தொடர்பாக ரணிலைச் சந்திப்பார் ஜனாதிபதி

(கொழும்பு)

அரசு- புலிகளுக்கிடையில் ஜெனீவாவில் நடை பெறவிருக்கும் பேச்சுவார்த்தை தொடர்பாக ஜனாதி பதி மஹிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் கலந்துரையாடத் தீர்மானித் திருப்பதாக ஜனாதிபதி செயலக வட்டாரம் தெரிவித் தது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கும் சர்வகட்சி மாநாட்டுக்கு முன்னதாக இந்தச் சந்திப்பு இடம்பெறவிருப்பதாகத் தெரியவருகின்றது.

போர்நிறுத்த உடன்படிக்கையை பாதுகாத்து தொடர்ந்து முன்கொண்டு செல்வது தொடர்பில் ஜெனீவாப் பேச்சுக்களின் போது பிரதான கவனம் செலுத்தப் படவிருப்பதால் அது குறித்து எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுடன் விரிவாகக் கலந்துரையாடுவதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தீர்மானித் திருக் கின்றார்.

போர் நிறுத்த உடன்படிக்கையை செய்து கொண்டவர் என்ற ரீதியிலும் உடன்படிக்கை முறிவடையாது பாதுகாக்கப்படவேண்டுமென்ற உறுதியான நிலைப் பாட்டிலிருப்பவர் என்ற அடிப்படையிலும் ரணிலின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதில் ஜனாதிபதி மஹிந்த ஆர்வம் காட்டி வருகின்றார்.

ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுக்களில் அரச தரப்பில் பிரதான பங்கு வகித்த பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட ஆகியோரின் ஆலோசனைகளையும் அரசாங்கம் பெற்றுக்கொண்டிருக்கின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதியுடனான சந்திப்புக் குறித்து ரணில் விக்கிரமசிங்க கருத்துக் கூறுகையில், அது தொடர்பில் இதுவரையில் தமக்கு அழைப்பெதுவும் கிடைக்கவில்லை எனவும் அழைப்பு விடுக்கப்பட்டால் நிச்சயம் சந்தித்து முழு அளவில் ஒத்துழைக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இது இவ்விதமிருக்க ஜெனீவாப் பேச்சுக்கான அரச தரப்புக் குழுவில் மேலும் ஓரிருவர் நியமிக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. ஏற்கனவே அரசு தரப்புக் குழுவில் மூவரது பெயர்கள் அறிவிக்கப்பட்டதையடுத்து முஸ்லிம் அமைச்சர்கள் ஜனாதிபதியை சந்தித்து தமது அங்கலாய்ப்பை வெளியிட்டனர். இதையடுத்து முஸ்லிம் கட்சிகள் அனைத்தும் ஒருமித்து ஒருவரது பெயரை பிரேரித்தால் அவரை குழுவில் இடம் பெறச் செய்யத் தயாராக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார். அரசாங்கம் ஏற்க னவே ஐவரடங்கிய குழுவை அனுப்புவதற்குத் தீர்மானித்திருந்தது.

இதேவேளை, பேச்சுக்களின் போது ஒத்துழைப்பு வழங்கச் செல்லும் அதிகாரிகள் மட்டக் குழுவில் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, கடற்படைத் தளபதி வசந்த கருணாகொட, இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் அமரசிங்க, அரச சமாதானச் செயலகத் தலைவர் ஜோன் குணரத்ன, திட்ட அமுலாக்கல் அமைச்சின் செயலாளர் அஜித் நவாட் இப்ராஸ், சிரேஷ்ட சட்டத்தரணி கோமின் தயாசிறி ஆகியோரின் பெயர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பதாகவும் மேலும் மூவரை நியமிப்பது குறித்து ஜனாதிபதி ஆலோசனை நடத்திவருவதாகவும் இவர்களது பெயர்ப்பட்டியல் நாளை புதன்கிழமைக்கு முன்னர் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

இதனிடையே அமைச்சர் மங்கள சமரவீர தலைமையிலான சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கான வழிகாட்டல் குழுவில் ஜெனீவா பேச்சுக்குச் செல்லும் அமைச்சர்கள் நிமால் சிறிபால டி சில்வா, ஜெயராஜ் பெர்ணாண்டோபுள்ளே, ரோஹித போகல்லாகம ஆகியோருடன் ஜனாதிபதி சட்டத்தரணிகள் விஜேதாஸ, ராஜபக்ஷ பாயிஸ் முஸ்தபா அமைச் சர்கள் ஸ்ரீபதி சூரியாரச்சி, டிலான் பெரேரா, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ, நிதித்திட்டமிடல் அமைச்சின் செலாளர் பி.பீ.ஜயசுந்தர, ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க, நீதியமைச்சின் செயலாளர் சுஹத் கம்லத், சட்டத்தரணிகள் ஆர்.கே. டபிள்யூ குணசேகர, டீ.பி. மெண்டிஸ், எஸ்.டபிள்யூ. ஜயவர்த்தன, விஜேதாஸ ராஜபக்ஷ, எஸ்.எல். குணசேகர, கோமின் தயாசிறி ஆகியோருடன் முப்படைகளின் தளபதிகள், பொலிஸ் மா அதிபரும் உள்ளடக்கப் பட்டுள்ளனர். (கு)

## ஜெனீவாப் பேச்சில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும்?

(கொழும்பு)

ஜெனீவா செல்லும் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தலைமையிலான அரசாங்கக் குழுவில் முஸ்லிம்களின் பிரதிநிதியாக அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் இடம்பெற விருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.



எதிர்வரும் 22, 23ஆம் திகதிகளில் இடம்பெற விருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடனான நேரடிப்பேச்சுக்களில் கலந்துகொள்ள வுள்ள அரசதரப்புக் குழுவினர் எதிர்வரும் 19ஆம் திகதி ஜெனீவாவிற்கு பயணமாகவிருப்பதாகவும் அக்குழுவில் அமைச்சர்கள் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே, ரோகித போகல்லாகம மற்றும் பொலிஸ்மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, கடற்படைத்தளபதி வசந்த கருணாகொட, இராணுவத் தளபதி சரத் பொன்சேகா, சமாதான செயலகப் பணிப்பாளர் ஜோன் குணரட்ண ஆகியோர் இடம்பெறுகின்றதாகக் கூறப்படுகின்றபோதும் அவற்றை உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்த முடியவில்லை.

இதேவேளை, ஜெனீவாப் பேச்சில் கலந்து கொள்ளும் தமிழீழ விடுதலைப் புலிகள் தரப்பினரும் எதிர்வரும் 18ஆம் திகதி ஜெனீவாவுக்கு பயணமாகவுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. (க-9)

### மஹிந்த சிந்தனையை முன்னெடுக்க

## உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியை கைப்பற்ற வேண்டும் -ஜனாதிபதி

(கொழும்பு)

மஹிந்த சிந்தனையை முன்னெடுத்துச் செல் வதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஆட்சியைக் கைப்பற்றுவது மிகவும் முக்கியமான தென்று ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.



கிராமங்களை முன்னேற்று வதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் அதிகாரங்களைப் பெறுவது அவசிய மெனவும் அவர் கூறியுள்ளார். அலரிமாளிகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலந்துரையாட லிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார். இதேவேளை ஐக்கிய தேசியக் கட்சியின் 7 உள் ளூ ராட்சி மன்ற உறுப்பினர்கள் நேற்றுமுன்தினம் ஐக்கியமக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்தனர். (க-39)

# ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

## INTERNATIONAL CRICKET COUNCIL




### 18 சற்றும் மனம் தளராத... (ஜக்கலிஸ்)

தென் ஆபிரிக்க அணியின் நம்பிக்கை நட்சத்திரமான இவர் கடந்த மூன்று வருடமாக ஐ.ஸீ.ஸியின் சகலதுறை வீரர்கள் வரிசையில் முதல் மூன்று இடங்களைப் பிடித்துள்ளார்.

துடுப்பாட்டத்தில் மூன்றாம் நிலை வீரராகக் களம்புகும் இவர், பந்துகளை சிறப்பாக எதிர்கொண்டு தனக்குரிய பாணியில் விளையாடுபவர். துடுப்பாட்டத்தில் மட்டுமல்ல, பந்துவீச்சு, களத்தடுப்பு போன்றவற்றில் சிறந்து விளங்குகின்றார்.

ஐ.ஸீ.ஸியின் சிறந்த டெஸ்ட் வீரர்-2005, சிறந்த வீரர் –2005 போன்ற விருதுகளை கடந்த வருடம் வென்றார். அத்துடன் ஐ.ஸீ.ஸியின் பந்துவீச்சுக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் 559 புள்ளிகளுடன் பட்டியலில்26இடத்திலும், துடுப்பாட்டத்துக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் 888 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும் உள்ளார்.

முழுப்பெயர் – ஜக் ஹென்றி கலிஸ்
பிறப்பு –ஒக்டோபர்16, 1975, கேப்ரவுண்
வயது – 30 (117 நாட்கள்)



துடுப்பாட்டம் – வலதுகை
பந்துவீச்சு – வலதுகை வேகப்பந்து
டெஸ்ட் ஆரம்பம் – எதிர் இங்கிலாந்து – டேர்பன் – டிசம்பர் 14–18, 1995.


### அடுத்தடுத்து சாதனைகள்/ விருதுகள் (அன்றூ பிளின்ரோவ்)

இங்கிலாந்து அணியின் நம்பிக்கை நட்சத்திரம். சிறந்த பந்துவீச்சாளர். சிறந்த இடைநிலை துடுப்பாட்டவீரர். சகலதுறை வீரர் என்றெல்லாம் இவரை வர்ணிக்கலாம்.

டெஸ்ட் போட்டியில் பந்து வீச்சில் திறமையினை வெளிக்காட்டாவிட்டால், துடுப்பாட்டத்திலும், துடுப்பாட்டத்தில் இல்லாவிட்டால், பந்துவீச்சிலும் தனது திறமையை தவறாது வெளிக்காட்டுபவர்.

கடந்த வருடம் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கெதிரான ஆஷஸ் தொடரை இங்கிலாந்து வெல்வதற்கு சிறந்த அடித்தளமிட்டவர்.

ஐ.ஸீ.ஸியின் சிறந்தவீரர்–2005, சிறந்த ஒருநாள் வீரர்–2004, பி.பி.சி யின் விளையாட்டில் பிரசித்தி பெற்றவீரர் –2005 மற்றும் விஸ்டன் கிரிக்கெற் வீரர்– 2004 என்ற




Big, northern and mighty proud of it, Andrew Flintoff hits the ball harder than any English cricketer since Ian Botham. He single-handedly inspired England to a two-run victory over Australia at Edgbaston in one of the greatest Tests of all time, and followed up with a maiden Ashes hundred at Trent Bridge. Sealing the series with a five-wicket haul at The Oval, Flintoff embarked on a 17-hour celebration culminating in an open-top bus parade through the streets of London. Super, Fred.

விருதுகளைத் தனதாக்கிக் கொண்டுள்ளார்.

இதேவேளை, ஐ.ஸீ.ஸியின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் பந்துவீச்சில் 781 புள்ளிகளுடன் 4ஆவது இடத்திலும், துடுப்பாட்டத்தில் 581 புள்ளிகளுடன் 33 ஆவது இடத்திலும் உள்ளார்.

முழுப்பெயர் – அன்றூ பிளின்ரோவ்
பிறப்பு – டிசம்பர் 6, 1977, பிறிஸ்ரன்
வயது – 28 (66நோட்கள்)
துடுப்பாட்டம்– வலதுகை
பந்துவீச்சு – வலதுகை வேகப்பந்து
டெஸ்ட் ஆரம்பம் –எதிர் தென் அபிரிக்கா – ஹொட்டிங்கம் –ஜூலை 23 –27, 1998.

### வீழப்போவதில்லை (ஷோன் பொலக்)

தென்னாபிரிக்க மற்றும் உலகின் சிறந்த



பந்துவீச்சாளராகக் கருதப்படுபவர் இவர். ஐ.ஸீ.ஸியினால் வெளியிடப்படும் பந்துவீச்சாளருக்கான டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் கடந்த 5 வருடங்களாக முதல் 5 இடங்களுக்குள் இருந்து வரும் பொலக், 2005ஆம் ஆண்டின் இறுதியில் இதனைத் தாண்டிச் சென்றார்.

அத்துடன் சகலதுறை வீரர்கள் வரிசையில் தனது அணி வீரர் கலிஸுக்கு அடுத்ததாக சிறந்து விளங்குகின்றார்.

விஸ்டன் கிரிக்கெற் வீரர்– 2003 என்ற விருதை மட்டும் இவர் சிறப்பாகப் பெற்றுள்ளார்.

ஐஸீஸியின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில்பந்துவீசசில்742புள்ளிகளுடன்9 ஆவது இடத்திலும், துடுப்பாட்டத்தில் 458 புள்ளிகளுடன் 56ஆவது இடத்திலும் உள்ளார்.

முழுப்பெயர் – ஷோன் மக்லேன் பொலக்
பிறப்பு – ஜூலை16, 1973, போர்ட்எலிசபெத்
வயது – 32 (209 நாட்கள்)
துடுப்பாட்டம் – வலதுகை
பந்துவீச்சு – வலதுகை அதிவேகம் மற்றும் வேகம்
டெஸ்ட் ஆரம்பம் – எதிர் இங்கிலாந்து – செஞ்சூரியன் நவம்பர் 16– 20, 1995.

### மறைத்து வைக்கமுடியாத பொக்கிஷம் (டானியல் விற்றோரி)

நியூசிலாந்து அணியின் சிறந்த சுழற்பந்து வீச்சாளராக இவர் சமகாலமாக துடுப்



பாட்ட வரிசையில் இறுதியாகக் களமிறங்கி கலக்கி வருகிறார்.

தனது 18ஆவது வயதில் நியூஸிலாந்து டெஸ்ட் அணியில் இடம்பிடித்தார்.

பங்களாதேஷ் அணிக்கெதிராக 2004 ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரண்டு டெஸ்ட் போட்டியில் விளையாடி 224 ஓட்டங்களைப் பெற்றார். இரண்டாவது டெஸ்ட் போட்டியில் ஆட்டமிழக்காமல் 137 ஓட்டங்களைப் பெற்றதே இவரின் சிறப்பம்சமாகும்.

ஐ.ஸீ.ஸியின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் துடுப்பாட்டத்தில் 471 ஆவது இடத்திலும், 52 ஆவது இடத்திலும், பந்து வீச்சில் 592 புள்ளிகளுடன் 23 ஆவது இடத்திலும் உள்ளார்.

முழுப்பெயர் –டானியல்லூகா விற்றோரி
பிறப்பு –ஜனவரி27, 1979, ஒக்லாண்ட்
வயது – 27 (14 நாட்கள்)
துடுப்பாட்டம் – இடதுகை
பந்துவீச்சு– இடதுகை புறச்சுழல்
டெஸ்ட் ஆரம்பம்– எதிர் இங்கிலாந்து பெப்ரவரி 6– 10, 1997.

### வீறுகொண்டெழுந்த இளஞ்சிங்கம் (இர்ஃபான் பதான்)

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் கபில்தேவிற்குப் பிறகு இந்திய அணியில் இடம்பிடித்திருக்கும் சிறந்த சகலதுறை வீரர் பதான்.



ஆரம்பப் பந்துவீச்சாளராகப் பந்துவீசும் பதான் சிலநேரங்களில் ஆட்டத்தின் போக்குக்கமைய மூன்றாவது வீரராகக் களம் புகுந்து எதிரணிப் பந்துவீச்சாளர்களை சல்லடை போட்டவர் 21வயதான பதான்.

டெஸ்ட் ஆட்டத்தில் விளையாடிய இரண்டு வருட காலத்தில் சிறப்பாகப் பிரகாசித்து உலகின் சகலதுறை வீரர் வரியையில் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் ஹற்ரிக் சாதனை புரிந்து அசத்தினார்.

ஐ.ஸீ.ஸி சிறந்த இளம் வீரருக்கான விருதை 2004இல் பதான் பெற்றமை இவரின் சிறப்பம்சமாகும்.

ஐ.ஸீ.ஸியின் டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் பந்துவீச்சில் 699 புள்ளிகளுடன் 15 ஆவது இடத்திலும், துடுப்பாட்டத்தில் 428 புள்ளிகளுடன்60ஆவதுஇடத்திலும் உள்ளார்.

முழுப்பெயர் – இர்ஃபான் கான் பதான்.
பிறப்பு – ஒக்டோபர் 27, 1984, பரோடா
வயது –21 (106 நாட்கள்)
துடுப்பாட்டம் – இடதுகை
பந்துவீச்சு – இடதுகை மிதவேகம்
டெஸ்ட்ஆரம்பம் –எதிர் அவுஸ்திரேலியா– அடிலெய்ட் – டிசம்பர் 12–16, 2003.

### நேயயல்

ஜன்கலிஸ் – தென்னாபிரிக்கா
அன்றூ பிளின்ரோவ் – இங்கிலாந்து
ஷோன் பொலக் – தென் ஆபிரிக்கா
இர்ஃபான் பதான் – இந்தியா
டானியல் விற்றோரி – நியூஸில்ாந்து

(அடுத்தவாரம் தொடரும்...)

| துடுப்பாட்டம் & களத்தடுப்பு | போட்டி | இனிங்ஸ் | ஓட்டம் | அதி. ஓட்டம் | சராசரி | சதம் | அரைச் சதம் | 4. ஓட்டம் | 6. ஓட்டம் | பிடிகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஜக்கலிஸ் | 96 | 161 | 7613 | 189* | 57.24 | 23 | 38 | 840 | 55 | 94 |
| அன்றூ பிளின்ரோவ் | 56 | 90 | 2816 | 167 | 32.36 | 05 | 18 | 388 | 66 | 37 |
| ஷோன் பொலக் | 97 | 137 | 3315 | 111 | 32.18 | 02 | 14 | 353 | 29 | 65 |
| டானியல் விற்றோரி | 65 | 94 | 1863 | 137 | 23.88 | 02 | 09 | 241 | 05 | 33 |
| இர்ஃபான், பதான் | 21 | 26 | 695 | 93 | 28.95 | 00 | 05 | 86 | 11 | 06 |
| பந்துவீச்சு | போட்டி | பந்துகள் | ஓட்டம் | விக்கெற் | சிறந்த இனிங்ஸ் | சிறந்த போட்டி | சராசரி | 4.விக் | 5.விக் | 10.விக் |
| ஜக்கலிஸ் | 96 | 12,916 | 5981 | 189 | 6/54 | 9/52 | 31.64 | 06 | 04 | 00 |
| அன்றூ பிளின்ரோவ் | 56 | 10,337 | 5137 | 163 | 5/58 | 8/156 | 31.51 | 08 | 02 | 00 |
| ஷோன் பொலக் | 97 | 22,172 | 8764 | 385 | 7/87 | 10/147 | 22.76 | 20 | 16 | 01 |
| டானியல் விற்றோரி | 65 | 16,199 | 7251 | 208 | 7/87 | 12/149 | 34.88 | 11 | 12 | 02 |
| இர்ஃபான் பதான் | 21 | 4,316 | 2394 | 81 | 7/59 | 12/126 | 29.55 | 02 | 07 | 02 |

## காத்து நிற்பேன்!

பெண்ணே! என் காதலை பலமுறை
உனக்கு சொல்லிவிட்டேன்
இன்னும் நீ மௌனமாய் இருப்பது ஏனோ?
உனக்கென காத்திருந்து நான்கு வருடங்கள்
கடந்துவிட்டன. ஒவ்வொரு காதலர் தினத்திலும்
உனக்கென பனிபடிந்த ரோஜாவுடன்
காத்திருந்து காத்திருந்து என் இதயம்
புண்பட்டு விட்டது. இன்னுமா உன் மௌனம்?

நீ தாமதிக்கும் ஒவ்வொரு கணமும்
என் ஆயுளும் குறைந்தே செல்கின்றது
இந்தக் காதலர் தினத்திலாவது உன் காதலை
எனக்குத் தெரிவிப்பாயா?
உன் அழகிய கண்களையும், உன் புன்னகையையும்
தினம் தினம் நான் காண்பதற்கு
இந்தக் காதலர் தினத்தில் அனுமதி தருவாயா!

என் வாழ்க்கையின் ஒவ்வொரு தினமும்
காதலர் தினமாக மாறுவதை இந்த
காதலர் தினத்தில் நீ கூறும் பதிலிலேயே
தங்கியுள்ளது!
இந்தக் காதலர் தினத்திலும் பனிபடிந்த
ரோஜாவுடன் காத்து நிற்பேன்!

பரணி, அல்வாய்

## இதமான நாளிதுவே!

காளையரும் கன்னியரும்
காதல் வயப்பட்டு
வேளை கனிந்துருக
வேட்கை மிதந்துவரும்!

கருத்துடன் கருத்துமோதி
கனிந்திடும் காதலன்பால்
உருப்பெறும் உலக வாழ்வில்
உன்னதம் உயர்ந்ததன்றே!

கன்னியரின் கருத்தினிலே
களமாடும் காளையர்கள்
இன்பத்தை எட்டுதற்கு
இதமான நாளிதுவே!

கூத்தாடி
வி.சி.குஞ்சிதபாதம்.

## காதலர் தின கவிதைகள்

## உன் வருகையை நோக்கி...!

நிலவே! உன் பார்வை மட்டும் போதுமா...?
ஏன்...? உன் உதடுகள் பேசாதா...?
உன் புன்னகை மட்டும் பேசுகிறது ஆனால்
உன் உள்ளத்தில் இருந்து வார்த்தைகள் வர மறுக்கின்றன
ஏன்...?
நான் உன்னை நோக்கும் போது
உன் பூ முகம் நிலத்தில் புதைந்து போவது எதற்கு?
செக்கச் சிவந்தவளே!
உன் நினைவோடு சிவந்த பாதங்களின் வருகைக்காக
காத்திருக்கின்றேன் உன்னை எண்ணி...!!

வெண்ணிலவன்.

## என் காதலே!

காதல் எப்படித் தோன்றுமென்று
அறிந்திருக்கவில்லை
உன்னைக் காணும் வரை
கண்களில் தான் தோன்றுமென்று
அறிந்து கொண்டதும்
உன்னைக் கண்ட பின்பே!
காதலின் இனிமையை
அனுபவித்தது
உன் கண்ணோடு என் கண்கள்
கலந்த போதுதான்!
காதலின் அவஸ்தையை
உணர்ந்து கொண்டதும்
உன்னைக் காணத் தவித்தபோதுதான்!
காதலின் ஏக்கத்தை உணர்ந்து கொண்டது
என் காதலை ஏற்பாயா
எனத் தவித்த போதுதான்!

அ.யசீகரன், கோண்டாவில்.

## சிறுகோட்டுப் பெரும்பழம்

சிறுகோட்டுப் பெரும்பழத்தின் மீது
இப்போது தான்
உன் பார்வை
விழுந்துளது!

நூறாயிரம் அவஸ்தைகள்
புழுக்களாய் நெளிய
இறுதிக் கணங்களின்
வருகை முன்
இறுகிக் கிடந்து
தொங்கிக் கொண்டிருக்கிறேன்!

உன் மௌனங்களை
அவிழ்த்து
'கல்லாக' என்றாலும்
எறி!
காலங் கடந்தாலும்
நானுன்
கைசேர வேண்டும்!

த.அஜந்தகுமார்.

## காதல் வேண்டும்

காதலை பழியாதீர் காதலை பழியாதீர்
காளையர் கன்னியர் காதலை பழியாதீர்
உணர்வில் உயர்ந்தது உண்மைக் காதல்
உயிர்கள் யாவிலும் உள்ளது காதல்!

சாதிவேற்றுமை காதலுக்கில்லை
சாத்திரம் கோத்திரம் காதலுக்கில்லை
தேய்தலும் வளர்வதும் காத்லுக்கில்லை
தோன்றினால் காதல் இறப்பதுமில்லை!

உலகம் வாழக் காதல் வேண்டும்
உயிர்கள் தோன்றக் காதல் வேண்டும்
கவிதைகள் பிறக்க காதல் வேண்டும்
காவியம் தோன்றக் காதல் வேண்டும்.

நீர்வை இரதி

## காதல்... காதல்... காதல்...

விட்டுக் கொடுப்பதும் காதலில் ஒரு சுகம் தான்!
காதல் உணர்வு இல்லா உயிர்களே இல்லை
என்பது உண்மையில் உண்மை!
காட்டாற்று வெள்ளம் போல் கரைபுரண் காதலை
கட்டுப்படுத்த முயல்வது பேதமை!
நதியின் பயணம் போல் நீண்டு செல்லும்
காதற் கடலில் சிக்கியோர் அதிகம், அதனாலேதான்
காதல் செய்வீர் உலகோரே! எனக் கழறினான் பாரதி!

வி.விஜி

## கண்கள் பார்க்க மலரும் காதல்!



உயர்விற்கும் தாழ்விற்கும் இடையில் கிடைத்த அவஸ்தைப் புள்ளி காதல்!
புகழுக்கும் மகிழ்வுக்கும் உரிய தெரியாக் காரணம் காதல்!
நிகழும் கணங்கள் இறந்து போகுமுன் உற்பத்தியாகும் அவசர சிசு காதல்!
நாடி நரம்புகள் கீதமிசைக்க ஓடும் ரத்தம் தாளமிசைக்க நாக்கு மட்டும் ஊறி நிற்கும்!
கண்கள் பார்க்க காதல் மலரும் மறக்க நினைத்தாலும் மனதில் தொடரும்!

நெற்கொழுதாசன்

## உனக்காக!

என் உள்ளத்தின்
ஒளி விளக்கே!
முகம் மலர்ந்த
உன் சிரிப்பில்
என்னை
ஈர்ந்தவனே
என் கவி வரிகளுக்கு
களம் அமைத்த
காதலனே
விழி நீரில் ஒளி இழந்து
தவிக்கிறேன்
உனக்காக!

T.கௌரி

## பனித்துளி போன்ற காதல்...

பனித் துளிகளே
வாருங்கள்!
உங்களை விட
மென்மையானவளை
காட்டுகிறேன்!

தென்றலே
ஓடி வா...!
மலருக்கு
வியர்த்திருக்கும்
விந்தையைப் பார்!

விண் மீன்களே
வேகமாய் வாருங்கள்!
உங்களைவிட
அழகான இரு
கண் மீன்களைக் காட்டுகிறேன்!

பௌர்ணமியே
இங்கே வா...!
முப்பது நாளும்
தேயாத முழு
நிலவை காட்டுகிறேன்!

வானம் வரை
எனக்கு
கைகள் நீளும் என்றால்
அங்கும் அவள்
உருவம் வரைவேன்!

அலைகள் மட்டும்
ஆடாமல் நிற்கும்
என்றால்
கடலின் மீதும்
காதல் காவியம் தீட்டுவேன்!

எஸ்.அனுராஜ்.

"காற்றிலேறி விண்ணையும் சாடுவர்
காதற் பெண்கள் கடைக்கண் பணியிலே"
~பாரதி

"கண்ணிற் கடைப்பார்வை
காதலியர் காட்டிவிட்டால்
மண்ணில் குமரர்க்கு
மாமலையும் சிறு கடுகாம்"
பாரதிதாசன்

## ஊடலும் காதலும்



தொட்டேன் நீ மலர்ந்தாய்
மெல்ல தட்டினேன் சிணுங்கினாய்
பட்டு மேனியை தடவிப் பார்த்தேன்
பெண்ணல்ல நீ பூ அல்லவோ!

பார்த்தேன் மெல்ல நெளிந்தாய்
பேசினேன் படபடத்தாய்
கிட்ட நெருங்கினேன் எட்டி நின்றாய்
நீ காதல் பைங்கிளி அல்லவோ!

கண்ணோடு கண்கள் கலந்திட்டபோது
மெல்ல நீயும் தலை சரித்ததும்
உன் உதட்டினில் தோன்றும் நகை அல்லவோ
அது ஒன்றே நம் காதல் சாட்சி அல்லவோ!

அழகாய் இருக்கென்று நிலவை நான் காட்ட
என்னிலும் அழகா என்று நீ கேட்டாய்!
ஊடலும் காண ஆமென் றுரைத்தேன்
ஊடலும் காதலும் உடன் பிறப்பல்லவா?

ஸ்ரீராம்

## காலம் கடந்த ஞானமாய்...!

பொங்கிப் பிரவகிக்கும்
நினைவுகளுக்கு மத்தியில்
கடந்த காலத்தின் சுவடுகளை
நீ நடந்த பாதை வழியே
கனத்த இதயத்தோடு
திரும்பிப் பார்க்கிறேன்

மௌனங்களோடு கூடுகட்டி
கனவுலகில் சஞ்சரித்தாலும்
என் ஆசைகளை
முகை வெடித்த
மொட்டுப்போல்
அரங்கேற்றியிருந்தேன்
உன்னிடத்தில்

நீயோ வார்த்தைகளின்
தவமிருப்பாய் ரணங்களின்
வலிகளோடு வேதனையின்
மொத்த உருவத்தையே
என்னுள் முகிழச்செய்தாய்!

அதன் பிரதிபலிப்பாய்
நிலவை தற்காலிகமாய்
மறைக்கும் மேகங்களையும்
நிரந்தரமாகக் கருதினாய்

இன்று யதார்த்தத்தின்
அனுகூலத்தை
சாதகமாக்குவதில்
முண்டியடித்து நிற்கிறது
காலங்கடந்த ஞானமாய்
உன் காதல்!

விமலன், அல்வாய்

## காதல் வலிகள்...!

அழிந்து விடுமோ
என்ற அச்சம்
கரை மூழுக்க – அவள்
காலடித் தடங்கள்
சில சமயம்
தலையே வெடிக்க
இருக்கும்
தலைவலியைக் கூட
தாங்கிக்கொள்கிறேன்
இருந்தும்
என்னவன் தந்த
காதல் வலி தாங்கமுடியாது...!
திரையிட வேண்டும்
உன் விழிகளுக்கு
காரணம் தவறினால்
மட்டுமல்ல
காதல்
தவறினாலும்
மரணமே
இப் புனித நாளே
உனக்குரிய இறுதிச் சந்தர்ப்பம்
அதுவரை
தாங்கிக்கொள்கிறேன்
என் வலிகளை! நிதுசி

# உள்ளத்தோடு உறவு கொள்ளும் உன்னதமான உணர்வு!




உன்னதமான உயிரித்துடிப்பின் ஓசைகளை மனமாளிகையில் வாசித்து எதிரொலிக்க வைத்து யாசித்துக் கொள்ளும் சக்தி காதலுக்குத் தான் உண்டு. வரலாறுகளுக்கு வடிவம் கொடுப்பதும் வாழ்க்கைக்கு உந்து சக்தியாக விருப்பதும் காதல் மட்டும் தான்.



காதலென்பது உணர்வின் பாய்ச்சல்; அது நேசிக்கத் தெரிந்தவனுக்குத்தான் இன்பம் ஊட்டுகிறது. கல்நெஞ்சக்காரனுக்கோ காதல் கசக்கவே செய்கிறது. ஏனெனில் இது உள்ளத்தோடு உறவுகொள்ளும் உன்னதமான உணர்வு.

### உயர் பண்புகளின் உள்ளடக்கம்

புரிந்துணர்வு, நம்பிக்கை, ஒற்றுமை, விட்டுக்கொடுப்பு, தியாகம், பக்தி, புனிதம், புதுமை எனும் உயரிய பண்புகளின் உள்ளடக்கமே உண்மைக் காதலின் கருவாகிறது. மனித வாழ்வில் காதல் எனும் சக்திக்கே முதலிடம் என்பது மறுக்க முடியாத உண்மை. காதல் ஏனும் சக்தி ஒவ்வொரு மனித மனங்களிலும் உட்பொருளாக உடனிருக்கிறது.

காதல் புனிதமானது அது மனித உணர்வுகள் அனைத்திலும் உன்னதமானது. வாழ்வை அர்த்தப்படுத்தும் உயிர்மூச்சு. காதல் மட்டும் உலகில் இல்லையென்றால் ஒற்றுமை என்ற சொல்லிற்கும் இன்பம் என்ற சொல்லிற்கும் எந்தமொழியிலும் இடமிருக்காது.

காதல் உட்பொருளாக ஏற்று உணரப் படவேண்டியது. சந்தோஷத்தில் அமைதியையும், சோகத்தில் சுகத்தையும் கொடுக்கும் திறன் காதலுக்கு மட்டுமே உண்டு. காதல் என்பது எப்போது, எப்படி, யாருக்கு, யார் மீது வரும் என்று கூறமுடியாது அது கடவுள் போன்றது. கடவுளை உணர மட்டுமே முடியும். உருவம் இல்லை. அது போல் காதலுக்கும் உருவம் இல்லை. கடவுள் மீது உண்மையான பக்தி செலுத்தும் போது எப்படி முக்தியின்பம் அடைகின்றோமோ அது போல் உண்மையான காதலை இனங்கண்டு. அன்பு செலுத்தும்போது அதைவிடச் சிறந்த இன்பம் வேறில்லை.

காதல் என்பது இன்று நேற்று தோன்றிய ஒன்றல்ல. மனித இனம் உலகில் எப்போது தோன்றியதோ அப்போதே உருவாகிவிட்டது. ஆதாம் ஏவாள் ஆரம்பித்து வைத்த காதல் இன்று உலகில் வேரூன்றிக் கிளை பரப்பி நிற்கின்றது.

### காதலர் தினம் பிறந்த கதை

காதல் என்பது இப்போது கணனி மயமாகிவிட்டது இன்ரநெற்றில் காதல் கொடி கட்டிப் பறக்கின்றது. காதலர் தினத்தை அறிய அதன் வரலாறு காண்போம்.

காதலர் தினம் என்பது ஏதோ இன்று நேற்றுத்தான் கொண்டாடப்படுகின்றது என்று நினைத்துவிடாதீர்கள். இயேசு நாதர் பிறந்த 270 ஆம் ஆண்டில் இதற்குப் பிள்ளையார் சுழி போடப்பட்டுவிட்டது.

அந்தக் காலத்தில் ரோமாபுரியை ஆண்ட மன்னன் இரண்டாம் கிளாடியஸ். இவன் ஒரு வேடிக்கையான மனிதன். திருமணத்தைப் பற்றி இம் மன்னன் கொண்டிருந்த எண்ணங்கள் மிகவும் விசித்திரமானவை.

போர் வீரர்கள் திருமணம் செய்து கொள்வது கிளாடியஸுக்குப் பிடிக்காத விடயமாக இருந்தது. மனிதர்களைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்குவதே திருமணம் என்பது இவரது கருத்து கல்யாணம் செய்து கொள்ளும் போர் வீரர்கள் தம் மனைவி, பிள்ளைகளை விட்டுப் பிரிய மனமில்லாது தங்கிவிடுவதை இவர் கட்டோடு வெறுத்தார்.

கிளாடியஸின் கொள்கைக்கு நேர்மாறானவர் அந்த மதகுரு. அவர்தான் வலன்டைன் பாதிரியார். அரசனை நேரடியாகப் பகைத்துக் கொள்ளாது காதல் ஜோடிகளுக்கு இரகசியமாகத் திருமணம் செய்து வைத்தார். இதனால் இளைஞர்களும் இளம் பெண்களும் இவரைப் புகழ்ந்து பாடினார்கள்.



பாதிரியார் பல திருமணங்களை இரகசியமாய் நடத்திவைத்து இளம் உள்ளங்களை இணைத்து வைத்தார். இவரைத் தேடிப் போனால் திருமணம் நிச்சயம்.

வலன்டைன் பாதிரியாரின் செயற்பாடு கிளாடியஸுக்கு மகா கோபத்தை உண்டாக்கியது. பாதிரியாரை சிறைப்பிடிக்க உத்தரவிட்டான் இருப்பினும் அவரை என்ன செய்தாலும் சும்மா இருக்க வைக்க முடியாது எனத் தெரிந்துகொண்ட கிளாடியஸைக் கல்லால் அடித்துக் கொன்றுவிட வேண்டும் என்று தண்டனை விதித்தான்.

அந்தத் தண்டனை நிறைவேற்றப்பட்ட நாள்தான் பெப்ரவரி 14. காதலுக்காகவும், காதலர்களுக்காகவும் உயிர்த் தியாகம் செய்த வலன்டைன் பாதிரியாரின் இந்த நாள்தான் இன்று காதலர் தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

'வலன்டைன் டே' எனப்படும் இக் காதலர் தினத்தினை ஜப்பான், கனடா, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளோடு ஆசிய நாடுகளும் சிறப்பாகக் கொண்



பாடுகின்றன. ஏன் எமது நாட்டின் வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள் கூட இத் தினத்தை மிகவும் சிறப்பாக கௌரவித்து வருவதைக் காணமுடிகின்றது.

இத்தினத்தில் காதலர்களுக்கிடையில் பலவகையான பரிசுப்பொருட்கள் கை மாறப்படும். 'டியூக் ஒப் ஆர்லின்ஸ்' எனப்படும் இங்கிலாந்து மன்னர் 1415 இல் பிரான்ஸில் இருந்த தன் மனைவிக்கு காதல் கவிதை எழுதி வாழ்த்து அட்டையை அனுப்பினார். அன்றிலிருந்து காதலர் தின வாழ்த்து அட்டையை அனுப்பும் பழக்கம் உருவானது. பிரான்ஸ் நாட்டில் இருதய உருவத்தை வைத்து வாழ்த்து அட்டை தயார் செய்யப்பட்டது. அன்றிலிருந்து காதலின் சின்னமாக இதயம் அடையாளம் காணப்பட்டு நடைமுறைக்கு வந்தது.

### காதல் மனிதனைப் பூரணப்படுத்தும்

காதல் மட்டும் இல்லையென்றால் நாம் நாகரீகம் அடைந்த உயிரினமாக பரிணமித்திருக்க மாட்டோம். ஒன்றின் மீது நேசம் கொள்ளும் போது அதனை நோக்கி எம் சிந்தனைகள் ஈர்க்கப்பட்டு சிநேகம் வளரும். அப்போது நாம் பல முன்னேற்றங்களை நோக்கி நடைபயிலத் தொடங்குகிறோம். எனவே மனிதனைப் பூரணப் படுத்துவதில் காதலின் பங்கு அளப்பரியதாகவே அமைகின்றதென்றால் அது மிகையாகாது.

காதலை கலையோடும் காவியங்களோடும் கட்டி பொழுதுபோக்கு விடயமாக மட்டும் நோக்காமல் யதார்த்த வாழ்விலும் அதனைக் கடைப்பிடிக்க வேண்டும் இதனையே

'நாடகத்தில் காவியத்தில் காதலென்றால்
நாட்டினர் தாம் வியப்பெய்தி நன்றாம் என்பர்
ஊடகத்தே வீட்டினுள்ளே கிணற்றோரத்தே
ஊரினிலே காதலென்றால் உறுமுகின்றார்
பாடைகட்டி அதைக்கொல்ல வழி செய்கின்றார்
பாரினிலே காதலென்னும் பயிரை மாய்க்க
மூடரெல்லாம் பொறாமையினால் விதிகள் செய்து
முறைதவறி இடரெய்திக் கெடுகின்றாரே'

என்றான் பாரதி

காதல் என்பது உயர்ந்த தியானம். உயர்ந்த தியாகம். இனம், மதம், குலம், கோத்திரம், வர்க்கம் என மனிதனையே மனிதன் கூறுபோட்டு அலைவது மட்டுமன்றி, வரதட்சணை எனும் கீழ்த்தரமான செயற்பாட்டிற்கும் உட்பட்டு தன்னைத் தானே தாழ்த்தியும் வரட்டுக் கௌரவத்திற்கு உட்பட்டிருக்கும் கலியுகத்தில் காதல் கொண்ட உள்ளங்கள் மட்டும் இந்த வரையறையில் இருந்து வெளியாகி சொந்தம், பந்தம், சொத்து, சுகங்கள் பாராமல் உள்ளத்திற்காக மட்டும் தன் வாழ்வினை அர்ப்பணிக்கும் தியாகிகளாக மலர்வதால், நேசித்தவர்க்கு அவரை நேசித்தவர் அளிக்கின்ற உறவில் உள்ள இன்பத்தினை ஈடு செய்ய இந்த உலகில் எந்த விதமான இன்பமும் இல்லை.

காதலித்தவரையே கைப்பிடித்து கணவன், மனைவி இருவரும் ஒருமித்து வாழ்ந்தால் தொடர்ந்து சாதனைகள் பல படைக்க முடியும். □

**விசாகன்**

## இ.தொ.கா, மலையக மக்கள் முன்னணி அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்கும்?

உள்ளூராட்சித் தேர்தலில் அரசாங்கத்தை ஆதரிக்க இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி ஆகியன முடிவு செய்துள்ளன.

'அரசாங்கத்துடன் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விவாதித்தோம். இந்த ஆலோசனைகள் தொடருகின்றன. இதனால் அரசாங்கத்தை ஆதரிக்க எமது கட்சி முடிவு செய்துள்ளது' என்று இ.தொ.கா நாடாளுமன்ற உறுப்பினர் முத்துசிவலிங்கம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டணி தொடர்பிலான மேலதிக விபரங்கள் குறித்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் சுசில் பிரேமஜயந்த, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன ஆகியோருடன் நேற்றுமுன்தினம் இ.தொ.கா மற்றும் மலையகமக்கள் முன்னணியினர் ஆலோசனை நடத்தினர்.

அரசாங்கத்தின் ஆதரவுடன் நுவரெலியா, கண்டி, மாத்தளை உள்ளிட்ட மலையகங்களில் வேட்பாளர்களை நிறுத்துவதற்கு இருகட்சியினரும் முடிவுசெய்தனர்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவர் பெ.சந்திரசேகரனும் அரசாங்கத்தை ஆதரிக்க முடிவு செய்துள்ளார்.

இரு கட்சிகளும் எதிர்வரும் 7 நாட்களுக்குள்ளாக தங்களது கட்சிகளின் வேட்பாளர் பட்டியலை வெளியிடவுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (சு-9)

## பாதீனியத்தை அழிக்க நடவடிக்கை

(இணுவில்)

இணுவில், உடுவில், மருதனார்மடம், உரும்பிராய், சுன்னாகம் போன்ற இடங்களில் பாதீனியக்களை தற்போது பூக்க ஆரம்பித்துள்ளது.

விவசாய சம்மேளனம் விவசாயத் திணைக்களம் என்பன இணைந்து இவற்றை அழிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக உடுவில் பிரதேச செயலர் தெரிவித்தார்.

அத்துடன் பாதீனியம் பரவும் வேறு இடங்களை உறுதிப்படுத்தி, அது தொடர்பாக பிரதேச சபையிடம் அறிவிக்குமாறும் விவசாய சம்மேளனங்களுக்குப் பிரதேச செயலர் மேலும் தெரிவித்தார். (சு-122)

## பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்ததால் பொலிஸ்துறையில் குழப்பம்

தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்து விட்டதால் பொலிஸ்துறையில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. அரசியல் அழுத்தங்களால் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகள் உட்பட 300 க்கும் மேற்பட்ட பல்வேறு நிலை அதிகாரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் பொலிஸ்துறை ஒட்டுமொத்தமாக பெரும் குழப்பத்தில் சிக்கியுள்ளது.

அரசியல் தேவைகளுக்காக இத்தகைய இடமாற்றங்களை அளிப்பதைத் தடுக்கவே தேசிய ஆணைக்குழுவை மீள உருவாக்குவதில் அரசாங்கம் தாமதிப்பதாகவும் பொலிஸார் கருதுகின்றனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு செயலிழந்ததையடுத்து அரசியல்வாதிகள், பிரதேச அமைப்பாளர் ஆகியோரது தேவைகளுக்காக இடமாற்றங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் அரசியல்வாதிகளின் உத்தரவின் பேரில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகள் பதவிக்குத் தகுதியற்றவர்கள் கூட நியமிக்கப்பட்டு வருகின்றனர்.

சட்ட ஒழுங்கை மதிக்கும் திறமையான அதிகாரிகள் பலரும் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பதவியை இழந்துள்ளனர்.

இந்நிலை தொடருமானால் பொலிஸ் திணைக்களமே சிதைந்து போய் சட்டம் ஒழுங்கு சீர்குலைவு பாரிய அளவில் ஏற்பட்டுவிடும் என்று மூத்த பொலிஸ் அதிகாரிகள் எச்சரித்து வருகின்றனர்.

தேசிய பொலிஸ் ஆணைக்குழு இருந்த போது அதனூடாக பொலிஸாருக்கு பெரும் பாதுகாப்புக் கிடைத்ததாகவும் அரசியல்வாதிகளின் தேவைகளுக்கேற்ப இடமாற்றங்களை செயற்படுத்த முடியாமல் இருந்தது என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

எனினும் தற்போது அரசியல் அழுத்தங்களினால் இடமாற்றங்கள் மேற்கொள்ளப்படுவதனால் பொலிஸார் விரக்தியடைந்துள்ளதாக ஒரு அதிகாரி தெரிவித்துள்ளார்.

இந்த இடமாற்ற முறையை உடனடியாக நிறுத்தி தேசிய ஆணைக்குழுவை உடன் நியமிக்குமாறு அரசாங்கத்தை அதிகாரிகள் கேட்டுள்ளனர். (சு)

# காந்தரூபன் சிறுவர் இல்லத்தின் விளையாட்டுப் போட்டி



(கிளிநொச்சி)

கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன் அறிவுச்சோலை சிறுவர் இல்லத்தின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணியளவில் இவ்வில்லத்தின் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

ஆ.அருணா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மங்கள விளக்கினை நிதித்துறையைச் சேர்ந்த நளன் ஏற்றினார்.

தேசியக் கொடியினை தமிழீழ கடற்படையைச் சேர்ந்த தமிழ்வாணன் ஏற்றினார். அதனைத் தொடர்ந்து காந்தரூபன் அறிவுச் சோலைக் கொடியினை காந்தரூபன் அறிவுச்சோலை நிர்வாகி புவியரசன் ஏற்றினார்.

இல்லங்களுக்கான கொடியினை அவ்வில்லங்களின் முதல்வர்கள் ஏற்றினர். தொடர்ந்து மைதான நிகழ்வுகள் ஆரம்பமாகின.

இந்நிகழ்விற்கு கொக்கிளாய் அ.த.க. பாடசாலையின் ஆசிரியை திருமதி. சகாய மேரி தலைமை தாங்கினார்.

சிறார்களின் ஐம்பது மீற்றர் ஓட்டம், அஞ்சலோட்டம், தடைதாண்டல், கயிறு இழுத்தல், வினோத உடை போன்ற பல விளையாட்டுக்கள் இல்லங்களிடையே நடத்தப்பட்டன.

செந்தளிர் சிறுவர் இல்ல சிறார்களின் புதிர் விளையாட்டும் இடம்பெற்றது. இந்த விளையாட்டு நிகழ்வில் சங்கிலியன், பண்டாரவன்னியன், எல்லாளன் ஆகிய இல்லங்கள் போட்டியிட்டன. நிகழ்வின் இறுதியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. (க)

## தவிடு நீக்காத அரிசியில் போஷாக்கு அதிகம்

(யாழ்ப்பாணம்)

தவிடு நீக்காத அரிசியில் போஷாக்கு அதிகம் உள்ளது என ஆயுர்வேத திணைக்கள பிரதி ஆணையாளர் வைத்திய கலாநிதி அமரசிறி பொன்னம்பெருமாள் கூறினார்.

தேவைக்கு அதிகமாக அரிசியைக் கழுவுவதன் மூலம் அதில் இருக்கும் போஷானைப் பதார்த்தம் நீக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டினார்.

இதனால் தவிடு நீக்காத சிவப்பரிசியை உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், இது குறித்து மக்களுக்கு தெளிவுபடுத்த வேண்டும் எனவும் அவர் கூறினார். (க-7)

# அவசரகால சட்ட நீடிப்பு விவாதம் இன்று

அவசர கால சட்டத்தை மேலும் ஒரு மாதத்திற்கு நீட்டிப்பது தொடர்பான விவாதம் இன்று நாடாளுமன்றில் நடைபெறவுள்ளது.

தலைமை அமைச்சரும் துணைப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க பிரேரணையை நாடாளுமன்றில் இன்று காலை சமர்ப்பிக்கவுள்ளார்.

நடைபெறும் வாக்கெடுப்பில் சிங்களக் கட்சிகளின் ஆதரவுடன் அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதத்திற்கு நீடிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் தமிழ் கட்சிகள் நாடாளுமன்றில் நடத்திய போராட்டத்தின் போது சபையின் வாக்கெடுப்பிற்கு விடப்புடாமலேயே அவசர காலச்சட்டம் நீடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க)

# பொதுமக்களிடம் ஆதரவு கோரல்

(கொழும்பு)

பலதரப்பட்ட குற்றச் செயல்புரிவோரைக் கைது செய்வதற்கென ஆரம்பிக்கப்பட்ட திடீர் சோதனைப் பிரிவு வெற்றிகரமாகச் செயற்படுவதற்கு, பொது மக்களின் ஆதரவு பொலிஸ்மா அதிபர் சந்திர பெர்னாண்டோ கோரியுள்ளார்.

'ஸ்ரேஞ்சஸ் நைற்' என்று பெயரிடப்பட்ட இந்தத் திடீர் சோதனை நடவடிக்கை மூலம் தேசிய பாதுகாப்பும் பலப்படுத்தப்படும் என்று குறிப்பிட்ட பொலிஸ்மா அதிபர் தேடுதல் நடவடிக்கைகளையிட்டு பொது மக்கள் எந்தவித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என்றும் கூறினார்.

பொது மக்களுக்கு எவ்வித அசௌகரியத்தையும் ஏற்படுத்தாத வகையில் பொலிஸார் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொள்வார்கள்.

திடீர் சோதனையின் போது மோசமாக நடந்து கொள்ளும் பொலிஸாருக்கு எதிராக கடும் நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

திடீர் சோதனையின் முக்கிய நோக்கம் பொது மக்களின் பாதுகாப்பை நிச்சயிப்பதாகும் என்று கூறிய அவர் எந்தவோர் இனத்துக்கும் அசௌகரியத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கமல்ல என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (து-7)

# முந்திரிகைச் செய்கையை விஸ்தரிக்க நடவடிக்கை

நாட்டின் முந்திரிகைச் செய்கையை விஸ்தரிக்கவென இந்தியாவிலிருந்து சிறந்த ரக முந்திரிகைச் செடிகளை இறக்குமதி செய்வது சம்பந்தமான நடவடிக்கைகளை அமைச்சர் சமல் ராஜபக்ஷ மேற் கொண்டுள்ளார்.

வடபகுதியில் மாத்திரம் மேற்கொள்ளப்பட்ட முந்திரிகைச் செய்கை 1990ஆம் ஆண்டளவில் அம்பாந்தோட்டை மாவட்டத்துக்கும் அறிமுகம் செய்யப்பட்டது.

முந்திரிகைச் செய்கையை விஸ்தரித்து உள்ளூர் சேவையை ஈடுசெய்வதன் மூலம் முந்திரிகைச் செய்கையாளர்களின் வருமானத்தை அதிகரிக்க முடியும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இவ்வாறான நடவடிக்கை மூலம் முந்திரிகை பழங்களை இறக்குமதி செய்வதால் ஏற்படும் செலவினமும் குறைக்கப்படும் என்றார் அவர்.

சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் சமல் ராஜபக்ஷ விடுத்துள்ள பணிப்புரையில் சிறந்த ரக முந்திரிகைக் கன்றுகளே இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

இந்தத் திட்டத்துக்கு நிதியுதவியையும் ஏனைய ஆலோசனைகளையும் விவசாய அமைச்சு வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது. (க-7)

# 2003-2004 ஆம் ஆண்டுகளுக்கான சினிமா விருது

## சிறந்த நடிகர்கள் - நடிகைகள் விபரம் அறிவிப்பு

2003, 2004ஆம் ஆண்டுகளுக்கான தமிழக அரசின் சினிமா விருதுகளை, முதல் - அமைச்சர் ஜெயலலிதா அறிவித்துள்ளார். விக்ரம், ஜெயம்ரவி சிறந்த நடிகர்களாகவும், லைலா, ஜோதிகா நடிகைகளாகவும் தேர்வு செய்யப்பட்டு இருக்கிறார் கள்.

2003, 2004 ஆகிய ஆண்டுகளுக்கான சிறந்த தமிழ்த் திரைப்படங்கள், சிறந்த இயக்குநர்கள், சிறந்த நடிகர்கள், சிறந்த நடிகைகள் மற்றும் சிறந்த தொழில் நுட்ப கலைஞர்கள், கலைத்துறை வித் தகர்கள் ஆகியோரின் பெயர்களையும், 2003, 2004ஆம் ஆண்டுக்கான தமிழ் நாடு திரைப் படம் மற்றும் தொலைக்காட்சி, தொழில்நுட்பப் பயிற்சி நிறுவன மாணவர்களால தயாரிக்கப்பட்ட குறும்படங்களின் சிறந்த இயக்குநர், நடிகர், தொழில் நுட்ப கலைஞர்கள் ஆகிய விருதுகளுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளோரின் பெயர்களும் அறிவிக்கப்பட்டுள்ளன.



2003ஆம் ஆண்டுக்கான தமிழக அரசின் திரைப்பட விருதுகள் வருமாறு.

சிறந்த படம் (முதல் பரிசு) - ஈரநிலம், சிறந்த படம் (இரண்டாம் பரிசு) -பவர் ஆப் உமன், சிறந்த படம் (மூன்றாம் பரிசு)- பார்த்தீபன் கனவு, சிறந்த படம் (சிறப்பு பரிசு) காம ராஜ்.

பெண்களை பற்றி உயர்வாக சித்தரிக்கும் படம்.- உன்னை சரண் அடைந்தேன்.

அளவான திட்ட மிட்ட குடும்ப நெறி களை பிரதிபலிக்கும் படம் (முதல் பரிசு)- காத லுடன் (2ஆம் பரிசு)- றெக்கை (3ஆம் பரிசு) - அன்பே.

சிறந்த நடிகர் - விக்ரம் (பிதாமகன்), சிறந்த நடிகை -லைலா (பிதாமகன்), சிறந்த நடிகர் (சிறப்பு பரிசு) ஸ்ரீகாந்த் (பார்த்தீபன் கனவு), சிறந்த நடிகை (சிறப்பு பரிசு) -மீரா வாசுதேவன் (உன்னைச் சரணடைந்தேன்), சிறந்த வில்லன் நடிகர் -ரியாஸ்கான் (பவர் ஆப் உமன்), சிறந்த நகைச்சுவை நடிகர்- விவேக் (பார்த்தீபன் கனவு), சிறந்த நகைச்சுவை நடிகை- தேவதர்ஷினி (பார்த்தீபன் கனவு), சிறந்த குணச்சித்திர நடிகர் -அலெக்ஸ் (கோவில் பட்டி வீரலெட்சுமி), சிறந்த குணச்சித்திர நடிகை -சங்கீதா (பிதாமகன்), சிறந்த இயக்குனர் -கரு.பழனியப்பன் (பார்த்தீபன் கனவு), சிறந்த கதையாசிரியர் -சமுத்திரக்கனி (உன்னைச் சரணடைந்தேன்), சிறந்த உரையாடலாசியர் - தேன்மொழி (ஈரநிலம்), சிறந்த இசையமைப்பாளர் -ஹாரீஸ் ஜெயராஜ் (காக்க காக்க), சிறந்த பாடலாசிரியர் - கபிலன் (பார்த்தீபன் கனவு), சிறந்த பின்னனி பாடகர் -உன்னிகிருஷ்ணன் (ராமச்சந்திரா), சிறந்த பின்னனிப் பாடகி - ஹரிணி (பார்த்தீபன் கனவு) (து)

# உயிருடன் சமாதியாக முயன்ற சாமியார் மீட்பு

## தற்கொலைக்குத் தூண்டியதாக பெற்றோர் மீது வழக்கு



'நான் இறைவனுடன் ஐக்கியமாகப் போகிறேன். இதற்காக எனக்குச் சமாதி கட்டுங்கள். உங்களுக்கு மதியம் 12 மணியளவில் ஒளி வடிவமாகக் காட்சி தருவேன்' எனக் கூறிக் குழிக்குள் இறங்கினார் சாமியார். ஒருவர் அவரைக் குழிக்குள் வைத்து பலகையால் மூடி சிமெந்தால் கட்டினார்கள். பகல் 12 மணியாகியும் அவர் ஒளி வடிவில் காட்சியளிக்காமல் போகவே தகவல் பொலிஸ்வரை சென்றது.


தகவல் அறிந்த பொலிஸ் சம்பவ இடத்துக்கு விரைந்து உயிரோடு ஒருவரைப் புதைத்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து விசாரணை நடத்தினார்கள், சிமெண்ட் பூசிய குழியை உடைக்கச் சொன்னார்கள்.

அதற்குச் சாமியாரின் சீடர்களும் சாமியரது பெற்றோரும் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

எனது மகன் கடவுளாகி விட்டான். அவரது சம்மதத்தோடுதான் குழிக்குள் வைத்தோம். குழியைத் தோண்டினால் அவர் இறந்து விடுவார் எனக் கூறி உடைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித் தனர்.

பொலிஸார் அந்த எதிர்ப்புகளைப் பொருட்படுத்தாது டாக்டரை வரவழைத்து சமாதியை உடைத்தனர். சமாதிக்குள் சாமியார் மயங்கிய நிலையில் காணப்பட்டார். அவர் உடனடியாக ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இது தொடர்பாக சாமியாரை உயிருடன் சமாதி வைத்த அவரது தந்தை தாய் முன்னாள் தி.மு.க.வின்சிலர் பரமேஸ்வரன் மற்றும் சமாதி கட்டிய கொத்தனார் உட்பட 16 பேர் மீது தற்கொலைக்குத் தூண்டியதாக வழக்குப் பதிவு செய்துள்ளனர். இச்சம்பவம் அண்மையில் ராஜபாளையத்தில் நடைபெற்றது. (து)



தைப்பூசத்தை முன்னிட்டு அண்ணனான ஸ்ரீரங்கம் ரெங்கநாதரிடம் இருந்து மங்களப் பொருட்களை சீர் பெறுவதுக்காக காத்திருந்த திருச்சி கொள்ளிடம் ஆற்றில் சமயபுரம் மாரியம்மன் தங்க வசத்துடன் பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

ஸ்ரீரங்கம் கோவில் சார்பாக யானை ஆண்டாள், மங்களப் பொருட்களுடன் சீர்வரிசையுடன் அழைத்து வரப்பட்டது.

# நடிகர் திலகம்

## செவாலியே டாக்டர் சிவாஜி கணேசன் அவர்களின்

# சுயசரிதை

49 மீள்பார்வை



### 'பா' வரிசைப் படங்கள்

டி.எஸ்.என். உங்களுடைய வாழ்க்கையில், ஒவ்வொரு பத்து ஆண்டுகளிலும் ஒரு திருப்புமுனை போல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1960லிருந்து பார்த்தோம் என்றால் பாப்புலராக ஒன்றைக் கூறலாம். அதாவது 'பா' வரிசைப் படங்கள் ' பாகப்பிரிவினை', 'பாவமன்னிப்பு', 'பாசமலர்', 'பாலும் பழமும்', 'பார்த்தால் பசி தீரும்','பார்மகளே பார்' என்பது போல் 'பா'வரிசையில் படங்கள் வர ஆரம்பித்தன. டைரக்டர் பீம்சிங், கவிஞர் கண்ணதாசன், இசையமைப்பாளர் விஸ்வநாதன் -ராமமூர்த்தி ஆகியவர்கள் கூட்டுமுயற்சியில் நீங்கள் நடித்து வெற்றி பெற்ற மிக நல்ல படங்கள் இவை. இந்தப் படங்களின் வெற்றியின் ரகசியம் பற்றிக்கூற முடியுமா?

சிவாஜி: 'பா' வரிசையில் படங்கள் வருமென்று டைரக்டர் பீம்சிங் அவர்களுக்கே தெரியாது. பீம்சிங் 'பா' என்ற முதல் எழுத்தில் ஒரு படம் எடுத்து அது நன்றாக ஓடியவுடன் சென்டிமென்டாக 'பா'என்றே படத்தின் முதல் எழுத்தை வைக் கலாம் என்று அவருக்குத் தோன்றியிருக்கலாம்.



'பாகப்பிரிவினை 'படத்தில் நம்பியாருடன்...

ஆனால் 'பா' வரிசையில் வந்த படங்கள் நன்றாகவே ஓடின. நீங்கள் கூறியது போல் நான் டைரக்டர் பீம்சிங் , கவிஞர் கண்ணதாசன் , இசையமைப்பாளர் விஸ்வநாதன் ராமமூர்த்தி ஆகியோரின் கூட்டுமுயற்சியால் உருவானவை இந்தப் படங்கள்.

மேலும் அந்தக் காலத்திலிருந்து மிகச் சிறந்த நடிக நடிகையர்கள் டெக்னீஷியன்கள் எல்லோரும் ஒன்றாக உழைத்து நல்ல திரைப்படங்களைத் தமிழ் திரையுலகிற்குத் தந்தோம்.

அந்தக் காலகட்டத்தில் நாங்கள் படங்களில் நடிக்கும் பொழுது எங்களுடைய முழுக்கவனமும் தொழிலில்தான் இருக்கும். முன்பெல்லாம் சினிமாவில் டீம் ஒர்க் மிகச்சிறப்பாக இருந்தது.

கதாநாயகன் நன்றாக இருக்கிறானா? அல்லது கதாநாயகி அழகாக இருக்கிறாளா? இயக்குனர் நன்றாக இயக்கக் கூடியவரா? என்ற சிந்தனைகளே யாருக்கும் இருக்காது. ஒரு படம் என்பது எல்லோரும் சேர்ந்து உருவாக்குவது. ஒரு டீமினுடைய வேலைதான் அந்தப் படம். எல்லோரும் சேர்ந்து கைத்தட்டினால்தானே நன்றாக இருக்கும். அதுபோல்தான் நாங்களும் ஒத்துழைத்து வெற்றிகரமான படங்களைத் தரமுடிந்தது.

பாகப்பிரிவினை படத்தில் கை கால் ஊனமுற்ற ஒரு பட்டிக் காட்டான் வேஷம் சரோஜாதேவி , நடிகவேள், பாலையா , சுப்பையா , எம்.என். நம்பியார் ஆகியோர் என்னோடு நடித்தார்கள். ஊனமுற்றவர்கள் தன்னம் பிக்கையோடு வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியும் என்ற கருத்தையும் ஒன்றுபட்டால் உண்டுவாழ்வு என்ற உயர்ந்த கருத்தையும் விளக்கிய படம் அது. இதுபோலப் பட்டிக்காட்டான் வேஷம் பட்டிக் காடா பட்டணமா என்ற படத்திலும் போட்டிருக் கிறேன். அதில் செல்வி ஜெயலலிதா அவர்கள் என்னோடு நடித்திருக்கிறார்கள்.



'பாசமலர் 'படத்தில் ஜெமினி கணேசன்,சாவித்திரியுடன்...

அடுத்தது பாவமன்னிப்பு படத்தில் ஜாதி , மத ஒற்றுமை பற்றிப் பேசினோம். இந்து, கிறிஸ்தவர், இஸ்லாம் என்ற பாகுபாடு இன்றி நாமெல்லாம் சகோதரர்களாக வாழவேண்டும் என்பதை கதை மூலமும் என் பாத்திரம் மூலமும் மக்களுக்கு எடுத்துச் சொன்னார்கள்.

இந்தக் காலகட்டத்தில டைரக்டர், கதாசிரியர், இசையமைப்பாளர், முக்கிய நடிகர்கள் எல்லோரும் சேர்ந்து உட்கார்ந்து கதையமைப்பு, கதாபாத்திரங்கள், பாட்டுக்கள் போன்றவற்றைப் பற்றிப் பேசி முடிவுசெய்வோம். மக்கள் எதை விரும்புகிறார்களோ அதைப் படத்தில் எப்படிச் சொல் லலாம் என்பதைப் பற்றிச் சிந்திப்போம். அதனால் தான் இதுபோன்ற பல படங்கள் நன்றாக ஓடியது.

டி.எஸ்.என்: 'பாசமலர்'என்ற படத்தை யாருமே மறக்கமுடியாத அளவிற்குக் கொடுத்திருந் தீர்கள். வீடுகளில் கூட அண்ணன் தன் தங்கை மீது கொஞ்சம் பாசம் அதிகம் காட்டினால் என்ன பாசமலர் சிவாஜி என்ற நினைப்பா? என்று பேசும் அளவுக்கு எல்லோருடைய மனதிலும் ஒரு பாதிப்பை ஏற்படுத்தியது அந்தப் படம். அதைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்களேன்.




'இரும்புத்திரை 'படத்தில் வைஜெயந்திமாலாவுடன்...

சிவாஜி: உண்மைதான் 'பாசமலர்' ஒரு அருமையான கதை. அதில் நான் ஜெமினி கணேசன், சாவித்திரி, எம்.என். ராஜம், தங்கவேலு ஆகிய எல்லோரும் ஒரு டீமாக வேலை செய் தோம். அன்பு, சகோதரபாசம், உறவு, கடமை போன்ற கருத்துக்களை ஒரு குடும்பக் கதையாக்கி பாசமலர் மூலம் மக்களுக்குச் சொன்னோம். இது ராஜாமணி பிக்சர்ஸின் தயாரிப்பு. பாசமலர் படத்தைதான் ராக்கி என்ற பெயரில் ஹிந்தியில் எடுத்தோம். இது எங்கள் படக் கம்பெனியான சிவாஜி பிலிம்ஸ் தயாரிப்பு. என் தம்பி சண்முகம் தான் அதைத் தயாரித்தார். அவர் தான் சிவாஜி நாடக மன்றத்தையும் ஆரம்பித்தார். அவர் தான் நாடகங்கள் நடப்பதற்கே முக்கியமானவர். அதுபோல சிவாஜி பிலிம்ஸ் பிரைவேட் லிமிடெட் என்ற ஒரு சினிமாக் கம்பெனியையும் ஆரம்பித்தார். நிறைய படங்களுக்கு டிஸ்ட்ரிபியூஷன் செய்தார். எங்களுடைய சிவாஜி பிலிம்ஷில் அந்தக் காலத்தில் ஒரு சில ஹிந்திப் படங்களும் எடுத்தோம். அதனால் இந்தியா முழுவதும் என்னை ஒரு நடிகன் என்று அடையாளம் தெரிந்துகொண்டார்கள். இதே காலகட்டத்தில் ஜெமினி அதிபர் எஸ்.எஸ்.வாசன் அவர்களுக்காக ஒரு படம் பண்ணினேன். தொழிலாளர்கள் பிரச்சினையைமையமாக வைத்து அமைக்கப்பட்ட கதை அந்தப் படம்தான். இரும்புத்திரை அதில் வைஜெயந்திமாலா அவர்கள் என்னுடன் கதாநாயகியாக நடித்தார்கள். சந்திரலேகா போன்ற பிரமாண்டமான படங்களை எடுத்தவரல்லவா எஸ்.எஸ் வாசன்! அவருடைய ஜெமினி பேனரில் நடித்தது பெருமையல்லவா. (தொடரும்)

# எமது பொறுமையை அரசு பலவீனமாகக் கருதுகின்றது!

(கொழும்பு)



தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்த நிறுத்தத்தின் பின்னர் பலத்த இழப்புக்களை சந்தித்திருந்தாலும் மிகுந்த பொறுமையைக் கடைப்பிடித்து வருகிறார்கள்.

ஆனால் அரசாங்கம் புலிகள் பலவீனமடைந்துள்ளனர். இதனால்தான் பொறுமையாக உள்ளார்கள் எனக் கருதுவதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்துள்ளார்.

வாகரைப் பிரதேசத்தில் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளை வாகரை அரசியல்துறை அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் சந்தித்துப் பேசியஎழிலன் தற்போதைய நிலைமைகள் பற்றி அவர்களுடன் கலந்துரையாடினார். அங்கு தமிழ் மக்கள் பலமாக இருப்பதன் மூலமே எதனையும் சாதிக்க முடியும் என்று குறிப்பிட்டதுடன் எதிரியையும் பலவீனமாகக் கணித்து விட முடியாது எனக் கூறினார்.

அரசாங்கம் யுத்தம் ஒன்றுக்கான ஏற்பாடுகளை செயற்படுத்தி வருகின்றது. அதற்கும் அனைவரும் தயாராகியிருக்க வேண்டுமென்றும் வலியுறுத்தியுள்ளார். அரசாங்கம் மீண்டும் இடைநிறுத்தப்பட்டிருந்த பேச்சுவார்த்தையை இம்மாதம் 23 ஆம் திகதி ஜெனீவாவில் ஆரம்பித்துள் ளது.

இப் பேச்சுவார்த்தை ஆரம்பத்தில் கலந்துதீர்மானிக்கப்பட்ட விடயங்களுக்கு அழுத்தம் கொடுப்பதாகவே அமையவுள்ளது. எனினும் இராணுவத்தினரிடம் இருந்து பிரதேசத்தையும் மக்களையும் பாதுகாத்துக்கொள்ளும் அதேவேளை, பிரதேசத்தின் அபிவிருத்திகள் தொடர்ந்தும் நடைபெறவேண்டுமென்றும்எழிலன் குறிப்பிட்டுள்ளார். (க-9)

# பேச்சுவார்த்தையில் முஸ்லிம் தனித்தரப்பு முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஜெனீவா பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக அனுமதிக்கப்படவேண்டும் என்று ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மீண்டும் வலியுறுத்தியுள்ளது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பொதுச்செயலாளர் ஹசன் அலி இது தொடர்பில் கருத்துத் தெரிவிக்கையில்,

அமைதிப் பேச்சுக்களில் முஸ்லிம்கள் தனித்தரப்பாக பங்கேற்க அனுமதிக்க வேண்டும் என்று முஸ்லிம் காங்கிரஸ் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. இனப்பிரச்சினையில் பாரிய முக்கியத்துவம் கொண்டவர்கள் முஸ்லிம்களுமே. எனவே, முஸ்லிம்களை பேச்சுவார்த்தையில் தனித்தரப்பாக அனுமதிக்க வேண்டும். இல்லாவிடின் எமது பிரச் சினைகளை அடை யாளப்படுத்துவதில் பாரிய சிக்கல் எழும். அனைத்து இனங்களுக்கும் கௌரவமான தீர்வை பெற்றுத்தர அரசாங்கம் முன் வருமேயானால் முஸ்லிம்களை தனித்தரப்பாக அங்கீகரிக்கவேண்டும் என்றார்.

இதனிடையே, ஜெனீவா பேச்சுக்களுக்கான முஸ்லிம் பிரதி நிதி யாக ஒருவரை பரிந்துரை செய்யுமாறு மஹிந்த ராஜபக்ஷவின் வேண்டுகோளை ஏற்று அமைச்சர் பேரியல் அஷ்ரப்பை அரசாங்கக் குழுவில் முஸ்லிம்பிரதிநிதியாக பங்கேற்க பல கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளதாகவும் கூறப்படுகிறது. (க)

# த.பு.க பணியாளர்களை மீட்க பொலிஸார் தேடுதல்

(கொழும்பு)

வெலிகந்தைப் பகுதியில் வைத்து கடத்தப்பட்ட தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணியாளர்களை மீட்க அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இத்தேடுதலில் குற்றப்புலனாய்வுப் பிரிவினரும் ஈடுபட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பொலிஸார் கடத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட தமிழர் புனர் வாழ்வுக் கழகப் பணியாளர்கள் வழங்கிய தகவல்களின் அடிப்படை யிலேயே இந்தத் தேடுதல் நடைபெற்று வருவதாகத் தெரிவித்துள்ளனர். (க)

# யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் விரிவுரைகள் புறக்கணிப்பு தொடர்கிறது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் விரிவுரைகள் புறக்கணிப்பு 2 ஆவது மாதமாக நீடித்து வருகிறது. யாழ்ப்பாண குடாநாட்டில் மாணவர்களின் கல்விச் செயற்பாட்டுக்கான இயல்பு நிலைக்கு அரச படைகள் குந்தகம் விளைவித்து வருவதைக் கண்டித்து கடந்த மாதம் 16ஆம் திகதி விரிரைகளைப் புறக்கணிக்கும் போராட்டத்தை மாணவர்கள் அறிவித்தனர்.

கடந்த புதன்கிழமையுடன் ஒரு மாதம் முடிவடைந்து 2 ஆவது மாதமாக இந்தப் போராட்டம் நீடித்து வருகிறது . இந்தப் போராட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ள பல்கலைக்கழகப் பிரதி பதிவாளர் அனு சா சிவனேஸ்வரன் பல்கலைக்கழகத்தின் வளாகத்தில் எந்த மாணவரது நடமாட் டமும் இல்லை என்று கூறினார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் 6ஆயிரம் மாணவர்களும் விரிவுரைப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர் . இராணுவத்தினரால் கல்விச் செயற்பாடுகளுக்கான இயல்பு நிலைமை மீள உருவாக்கப்படாத நிலையில் மாணவர்கள் போராட்டம் தொடர்ந்து நீடித்து வருகிறது. (க)

# கட்டட வேலைகள் பூர்த்தி

உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்துக்கான மூன்று மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கான வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன. இதற்கான நிதியுதவிகளை சமுதாய மீளளிப்பு திட்ட நிறுவனம் (நிக்கொட்)வழங்கியுள்ளது.6 வகுப்பறைகளும் ஒரு மண்டபமும் உள்ளடக்கிய இந்தக் கட்டடம் சம்பிரதாயபூர்வமாக மிக விரைவில் திறந்து வைக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் திறந்து வைக்கப்பட்டதும் மாணவர்களுக்கான இடநெருக்கடியை குறைத்து கொள்ள முடியும் என இந்தப் பாடசாலை அதிபர் ந. சிவகடாட்சம் தெரிவித்தார். (க-7)

# தாக்குதல் திட்டம் முறியடிப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் நியூயோர்க் நகரத்தில் இருந்து உலக வர்த்தக மையக் கட்டடங்கள் மீது நடத்தப்பட்டதைப் போன்றே, விமானத்தைக் கடத்திச் சென்றுலொஸ் ஏஞ்சலீஸில்உள்ளஅமெரிக்கவங்கிஅமைந்துள்ள அடுக்குமாடிக் கட்டடத்தையும் தகர்க்க அல்கெய்தா பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால் ஆசியாவைச் சேர்ந்த 4 நாடுகள் அது பற்றிய தகவல்களை அமெரிக்காவுக்குக் கொடுத்ததால், அந்தப் பயங்கரவாதச் சதி முயறியடிக்கப்பட்டுவிட்டது என்று அமெரிக்க அதிபர் புஷ் தெரிவித்தார்.

தேசிய இராணுவ வீரர்கள் நினைவு அரங்கத்தில் உரையாற்றிய புஷ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

2002, அக்டோபரில் அச் சதிச் செயலை நடத்த பயங்கரவாதிகள் திட்டமிட்டிருந்தனர். அதற்காக தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இளைஞர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு அல்கெய்தா அமைப்பு பயிற்சியளித்தது.

ஷூவுக்குள் வெடிகுண்டை மறைத்துக் கொண்டு விமானத்தில் ஏறி, அதைக் கொண்டு விமானியின் அறைக் கதவைத் தகர்த்து உள்ளே சென்று, அவ் விமானத்தைக் கடத்திச்சென்று லொஸ்ஏஞ்சலீஸில் உள்ள அமெரிக்க வங்கிக் கட்டடத்தின் மீது மோதுவதுதான் அவர்களது திட்டம்.

ஆனால் தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த இரு நாடுகளும் தெற்கு ஆசியாவைச் சேர்ந்த இரு நாடுகளும் அச் சதி பற்றிய தகவலை அமெரிக்காவுக்கு அளித்தன. அதன் மூலம் அச் சதி முறியடிக்கப்பட்டது என்று புஷ் மேலும் கூறினார். (து)

WORLD NEWS உலக தரிசனம்

# வளைகுடாவில் வாழும் இந்திய மணமகன்களிடம் எயிட்ஸ் பரிசோதனை

(துபாய்)

வளைகுடா நாடுகளில் வாழும் இந்தியர்களை மணமகன்களாக தேர்வு செய்யும் பெண்களின் பெற்றோர்கள் மணமகன்கள் எயிட்ஸ் பரிசோதனை செய்துகொள்ள வேண்டும் என்று வலியுறுத்தும் போக்கு அதிகரித்து வருகிறதாம்.

இச் செய்தியை 'கல்ப் நியூஸ்' வெளியிட்டுள்ளது. இவ் விஷயம் தொடர்பாக சிலரது கருத்துக்களையும் அது வெளியிட்டுள்ளது. இந்தியாவில் எயிட்ஸ் நோயின் பரம்பல் அதிகரித்து வருவதால் இந்தப் பயம் பெண்களின் பெற்றோர்களிடம் ஏற்பட்டுள்ளது. இருப்பினும் அவர்களின் நியாயமான வலிறுயுத்தலில் தவறு ஏதும் இருப்பதாகக் கருதவில்லை என்று அபுதாபியைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த விஷயத்தில் யாரையும் குற்றம் சாட்ட விரும்பவில்லை. தேவைப்பட்டால் எயிட்ஸ் பரிசோதனை செய்துகொள்வதில் தவறு ஏதும் இல்லை என மக்கள் தொடர்பு ஏஜென்சியில் பணிபுரியும் அரவிந் முகர்ஜி தெரிவித்தார்.

எயிட்ஸ் பரிசோதனையை மணமகன் மணமகள் இருவருமே செய்துகொள்வது சிறந்த நடவடிக்கையாக அமையும் என்று இந்திய சமூக நலக்குழுவின் அமைப்பாளர் கே.கே.குமார் கருத்துத் தெரிவித்துள்ளார். (து)

# ஏரியல் ஷரோனின் நிலை தொடர்ந்தும் கவலைக்கிடம்

(ஜெருசலேம்)

இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனின் உணவுக் குழாயின் சேதமடைந்த பகுதி அகற்றப்பட்டபின் அவரது நிலை திருப்திகரமாக உள்ளது என்றும் அவர் இன்னும் 'கோமா' நிலையில் தான் இருக்கிறார் என்று ஹடாசா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.



இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோனுக்கு கடந்த மாதம் மூளையில் இரத்தக் கசிவு ஏற்பட்டு ஜெருசலேம் ஹடாசா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். டாக்டர்கள் சிகிச்சை அளித்தும் அவரது உடல் நிலை கவலைக்கிடமாக இருந்துவந்தது.

இந்த நிலையில், ஷரோனின் உணவுக்குழாய்ப் பகுதியில் பிரச்சினை ஏற்பட்டதால் 'சி.டி.', ஸ்கேன் எடுத்து பார்க்கப்பட்டது. அப்போது உணவுக்குழாயின் கீழ் பகுதி மிகவும் பாதிக்கப்பட்டு இருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது. இதன் காரணமாக கடந்த சனிக்கிழமை அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

நான்கு மணி நேரம் நடந்த இந்த அறுவைச் சிகிச்சையில் ஷரோனின் உணவுக்குழாயின் சேதமடைந்த பகுதியை டாக்டர்கள் அகற்றினர். அறுவை சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது.

ஷரோனுக்கு உடனடியாக எந்த ஆபத்தும் இல்லை. எனினும் அவர் சுய நினைவின்றி உள்ளார் என ஹடாசா மருத்துவமனையின் இயக்குநர் ஷ்லோமே மோர்யூசோப் தெரிவித்தார்.

ஏரியல் ஷரோன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவுடன் பிரதமரின் பொறுப்புகளை இடைக்கால பிரதமர் ஏஹூத் ஆல்மர்ட் கவனித்து வருகிறார். வரும் மார்ச் மாதம் இஸ்ரேலில் பொதுத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தலில் ஏரியல் ஷரோனின் 'காதிமா' கட்சி எளிதில் பெற்றிபெறும் என்று கருத்துக்கணிப்புகள் தெரிவித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (து)

# துப்பாக்கி முனையில் 12 பக்தர்கள் கடத்தல்

(திக்ரித்)

ஈராக் தலைநகர் பக்தாத்தில் இருந்து 100கிலோ மீற்றர் தொலைவில் சமாரா என்ற இடத்தில் புகழ்மிக்க இஸ்லாமிய புனித ஸ்தலம் உள்ளது. அங்கு பிரார்த்தனை செய்வதற்காக ஈரான் நாட்டைச்சேர்ந்த பக்தர்கள் சென்றனர். அப்போது துப்பாக்கியுடன் வந்த மர்ம மனிதன் 12 பக்தர்களை மிரட்டி கடத்திச்சென்றான்.

இதுபற்றி தகவல் கிடைத்த ஈராக் இராணுவத்தினர் விரைந்துசென்று தேடுதல் வேட்டை நடத்தி 3 பேரை மீட்டனர். 9பேர்எங்கு தடுத்துவைக்கப்பட்டிருக்கிறார்கள் என்ற விவரம் தெரியவில்லை. மீட்புநடவடிக்கையில் இராணுவத்தினர் தொடர்ந்து ஈடுபட்டு வருவதாக அதிகாரிகள் தெரிவித்தனர். (து)



சீனாவில் தேவதைகள் போல உடையணிந்து பெண்கள் காதலர்களுக்கு காதலர் தின வாழ்த்து அட்டைகளை வழங்குகின்றனர்.

# பிலிப்பைன்ஸில் நிலச்சரிவு 8 பேர் பலி

(மணிலா)

மத்திய பிலிப்பைன்ஸில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட நிலச்சரிவில் 8 பேர் இறந்தனர். இவ் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

பிலிப்பைன்ஸில் கடந்த நான்கு தினங்களாக கடுமையான மழைபெய்து வருகிறது. இதையடுத்து இந்த நிலச்சரிவு ஏற்பட்டுள்ளது. மீட்புப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகின்றன என்று அரச வட்டாரங்கள் தெரிவித்தன. (து)

# ஈரான் மீது தாக்குதல் நடத்த திட்டமிடுகிறது அமெரிக்கா

(லண்டன்)

ஈரான் நாட்டில் அணுகுண்டு தயாரிப்பதற்கான முயற்சிகள் செய்யப்படுவதாக மேற்கத்திய நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. ஆனால் இதை ஈரான் மறுத்துள்ளது. அணுசக்தியை ஆக்கபூர்வமான பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்துவதாக ஈரான் கூறியுள்ளது. இருந்தபோதிலும் ஈரான் அணுசக்தி விவகாரத்தை ஐ.நா.பாதுகாப்பு சபைக்கு அனுப்ப மேற்கத்திய நாடுகள் தீர்மானித்துவிட்டன.

அணுசக்தி விவகாரம் ஐ.நா.சபைக்கு அனுப்பப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் தங்கள் நாட்டில் உள்ள அணுசக்தி நிலையங்களில் ஐ.நா.சபை அமைத்திருந்த கண்காணிப்பு கமராக்களை உடனடியாக அகற்றும்படி ஈரான் கூறிவிட்டது.

இதைத் தொடர்ந்து இந்த கமராக்கள் அகற்றப்பட்டன. இதற்கிடையே அணுசக்தி பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகப்போவதாகவும் ஈரான் ஜனாதிபதி எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

இதேபோல சில ஆண்டுகளுக்கு முன்பு வடகொரியாவும் அணுசக்தி பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகியமை குறிப்பிடத்தக்கது. இந்த நிலையில் ஈரான் நாட்டில் உள்ள அணுசக்தி நிலையங்கள் மீது குண்டுவீசி தாக்குதல் நடத்த அமெரிக்கா திட்டமிட்டு வருகிறது.

ஈரான் நாடு அணுகுண்டு தயாரிப்பதை தடுப்பதற்கான கடைசி முயற்சியாக ஈரானில் எந்த இடங்களில் குண்டுவீச்சு நடத்தலாம்? இதற்கான படைபலத்தை எவ்வாறு கொண்டுசெல்வது என்பது குறித்து அமெரிக்க இராணுவ தளபதிகள் ஆலோசனை நடத்தி வருவதாக லண்டனில் இருந்து வெளியாகும் சண்டே டெலிகிராப் என்ற பத்திரிகை தகவல் வெளியிட்டிருக்கிறது. (து)

# 42 ஆயிரம் கிலோ மீற்றர் தூரம் விமானத்தில் தொடர்ந்து பயணம்

(லண்டன்)

61வயது அமெரிக்கர் தன்னந்தனியாக விமானத்தில் தொடர்ந்து 42ஆயிரம் கிலோமீற்றர் தூரம் பறந்து புதிய சாதனை படைத்துள்ளார். அமெரிக்காவைச் சேர்ந்தவர் லட்சாதிபதி ஸ்டீவ் போசெட் 61 வயதாகும். இவர் புதிய சாதனைகளைப் படைப்பதில் ஆர்வம் மிக்கவர்.

விமானத்தில் இடைவிடாமல் தொடர்ந்து அதிக தூரம் பறக்கவேண்டும் என்று இவர் ஆசைப்பட்டார். இதற்காக விசேட விமானம் ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விமானத்தின் இறக்கைகள் 11 மாடிக்கட்டடம் எவ்வளவு உயரம் இருக்குமோ அந்த அளவுக்கு நீளமாக இருந்தன.

விமானம் நிற்காமல் தொடர்ந்து பறக்க வேண்டும் என்பதற்காக அந்த விமானத்தில் 8 ஆயிரத்து 100 கிலோ எடை கொண்ட பெற்றோல் நிரப்பப்பட்டது. இது அந்த விமானத்தின் எடையைப்போல 6 மடங்கு ஆகும். சாதனையாளர் போசெட் கடந்த புதன்கிழமை அமெரிக்காவில் உள்ள புளோரிடாவில் இருந்து புறப்பட்டார்.

உலகை சுற்றி கிழக்கு நோக்கி பறந்த அவர் கடந்த 4 நாட்களாக தூங்காமல் விமானத்தை ஓட்டினார். 4நாட்களும் அவர் பால் மட்டுமே குடித்தார். சனிக்கிழமை அவரது விமானத்தில் இருந்த ஜெனரேட்டர் பழுதாகிவிட்டது. அயர்லாந்துக்கு மேல் அவர் பறந்து கொண்டிருந்த போது பழைய சாதனையை முறியடித்தார். (து)

# இராணுவ விமானத்தில் தீ சூடானில் 20 பேர் பலி

(கார்தோம்)

சூடான் நாட்டு இராணுவ விமானம் ஒன்று அந்நாட்டின் தெற்குப் பகுதியில் உள்ள ஆவில் நகர விமான நிலையத்தில் தரை இறங்கியது. அந்த நேரத்தில் விமானத்தின் முன்புற டயர் திடீரென்று வெடித்ததால் நிலைகுலைந்து ஓடி அருகில் இருந்த கட்டடத்தின் மீது மோதியது. இதில் விமானம் தீப்பிடித்து வெடித்து நொறுங்கியது.

விபத்துக்குள்ளான அந்த விமானத்தில் 7 சிப்பந்திகளும், 13இராணுவ வீரர்களும் இருந்தனர். அனைவரும் இந்த பரிதாப விபத்தில் பலியானார்கள். (து)

காதல் என்பது ஊஞ்சலில் இருந்து ஆடுவது போல் அன்று. புயலுக்கு நடுவே படகைச் செலுத்துவது போன்றதாகும்.

-வி.ஸ.காண்டேகர்

வலம்புரி

## 'காதலர்தினம்' இனத்துவப் பண்பாட்டின் எல்லை கடந்ததல்ல

இன்று காதலர் தினம். உலகளாவிய ரீதியில் காதலர்கள் ஒன்று கூடி களிப்புறும் நாளாக இது பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

சர்வதேச ரீதியில் அனுஷ்டிக்கப்படும் இந் நாளில் காதலர்களின் கொண்டாட்டம் இனத்துக்கினம் தேசத்துக்குத் தேசம் வேறுபட்டதாக விருக்கும்.

தமிழர்களைப் பொறுத்தவரை 'காதல்' என்ற சொற்பதம் அளவு கடந்த அன்பின் கனிவாக கணிக்கப்பட்டுள்ளது.

'காதல்' என்பது அன்பின் உச்சம். இதில் ஆபாசம் கிடையாது. விரசத்திற்கு இம்மியும் இடமில்லை. எனினும் சந்தர்ப்ப சூழ்நிலை காரணமாகவும் மொழியியலாளர்களின் அவசரத் தன்மையும் லவ்(LOVE) என்ற ஆங்கிலப் பதத்திற்குக் காதலென்ற மொழி பெயர்ப்பு வழங்கப்பட்டுவிட்டது.

இதன் காரணமாக உயரிய அன்பின் வெளிப்பாடான 'காதல்' இன்று விடலைப் பருவ கோளாறாக-வீதிகளில் அலையும் வில்லங்கமாக மாறிவிட்டது.

'காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி...' என்ற பாடல் வரி இறைவன் மீது அடியார்கள் கொண்ட காதலின் வெளிப்பாட்டைக் காட்டுவதாக அமைந்துள்ளது.

இறைவன் மீது வைக்கப்படுகின்ற காதலில் ஏமாற்றமில்லை; தோல்வியில்லை; துன்ப துயரமில்லை. எல்லாமே ஆனந்த மயம். இங்கு அற்புதமான பேரானந்தத்தைக் குறிக்கும் 'காதல்' இன்று மானிட அன்பியலுக்குள் அகப்பட்டு தனது பெறுமானத்தை இழந்து போய் நிற்கின்றது.

சர்வதேசம் இன்று ஆங்கில இனத்தினால் ஆளப்படுகின்றது. இன்னமும் அரைகுறை ஆடையில் அலைந்து திரியும் ஆங்கில இனத்தின் ஆட்சியில்; பெற்றோர் தினம் , ஆசிரியர் தினம் , காதலர் தினம் இன்னும் சில வருடங்கள் போனால் 'காதலில் தோல்வியுற்றவர் தினம்' என்று வருடம் பூராகவும் தினம் குறித்தொதுக்கப்பட்டுவிடும்.

நாளும் தொழ வேண்டிய பெற்றோர்களுக்கு வருடத்தில் ஓர் தினம் எதற்கு? எப்போதும் எந்த இடத்திலும் குருவை வணங்கும் முறைமைக்கு ஒரு நாள் தேவையா?


இந்த நியாயமான கேள்விகளைக் கேட்கக் கூடிய தமிழினம் ஆங்கிலத்தாரின் செம்மையற்ற வழிநடத்தலுக்குள் அகப்படலாகாது.

காதலர் தினம் நமக்குரியதல்ல. அது ஒரு நாள் மட்டும் காதலித்து மறுநாள் கைகாட்டி விடைபெறும் கலாசாரத்தின் சொந்தக்காரர்களுக்கு மட்டுமே உரியதென்பதை கட்டுக்கோப்புள்ள உயரிய பண்பாட்டு எல்லைகளையு டைய நாம் இன்றைய நாளில் நினைவுறுத்திக் கொள்ள வேண்டும்.

---

மாநகர சபைப் பிரிவு மக்களின் நலன் கருதி

## பல்வேறு அபிவிருத்தி பணிகளை மேற்கொள்ள வதிவோர், வரியிறுப்பாளர் சங்கம் தீர்மானம்



(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளின் அபிவிருத்தி கருதி யாழ். மாநகரசபை வதிவோர், வரியிறுப்பாளர் சங்கம் இந்த ஆண்டு பல அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள் ளது.

இது தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பு நேற்று முன்தினம் யாழ்.பஸ்தியன் ஹோட்டலில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் இவ்வருடம் மேற் கொள்ளப்பட வேண்டிய அத்தியாவசிய வேலைத் திட்டங்கள் தொடர்பாகவும் மாநகரசபைப் பகுதியில் வசிக்கும் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் பத்திரிகையாளர்களுக்கு விளக்க மளிக்கப்பட்டது.

அதற்கமைய இந்த ஆண்டில் நடை முறைப்படுத்தப்படவுள்ளதாக இந்தக் கட்டடத்தில் தெரிவிக்கப்பட்ட திட்டங்கள் குறித்த விபரம் வருமாறு:

*யாழ்.நகரப் பகுதியை அழகிய நகரமாக மாற்றும் நோக்கில் குப்பைகளை அகற்றி சுகாதாரத்தைப் பேணுதல், சூழலைப் பாதுகாக்கும் வகையில் மரங்களை நாட்டல், மலசலகூட வசதிகளை செய்து கொடுத்தல், போசாக்கு நிலைமையை மேம்படுத்தல்.

*யாழ்.கோட்டையைச் சூழவுள்ள பிரதேசத்தை புல்லுக்குளத்தை பொழுது போக் கும் இடமாக மாற்றுதல்.

*வறிய வீடற்ற மக்களுக்கு வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்

*திருட்டு மற்றும் கலாசார சீர்கேடுகளை தவிர்க்கும் வகையில் மாநகரசபை, பிரதேசசபை ரீதியாக சனசமூக நிலை யங்களை ஒன்றிணைத்து குழுக்களை நியமித்தல்.

*எயிட்ஸ் நோய்த்தடுப்பு பெண்கள், சிறுவர்கள் பாதுகாப்பு போன்றவை தொடர் பாக விழிப்புணர்வுக் கூட்டங்களை நடத்துதல்.

*நீர்வடிகால்களை அமைத்தல் குளங்களில் நிர்தேக்குதல்.

*வாகன நெரிசலைக் குறைத்தல் வீதிகளைத் திருத்துதல்.

*பெரியகடை, சின்னக்கடை, சந்தைகளை அபிவிருத்தி செய்தல்

*கட்டாக்காலி நாய்களை இனங்கண்டு அழித்தல், நுளம்புகளை ஒழித்தல்.

*மின்சார விநியோகத்தை சீராக்குதல். யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில்

*வறிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல், தொழில் நுட்ப பயிற்சிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

*மயானங்களை புனரமைத்தல் சிறந்த முறையில் பராமரித்தல்.

*வறிய வீடற்ற மக்களுக்கு வீடமைப்பு வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

*அரச காணிகளை இனங்கண்டு அவற்றை உச்ச பயன்பாடு வருவாய்த் திட்ட ங்களுக்கு பயன்படுத்துதல்.

ஆகிய திட்டங்களே இந்த ஆண்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளன.

இவ்வாறான திட்டங்களை சிறந்த முறையில் நடைமுறைப்படுத்த பொது மக்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வதிவோர், வரியிறுப்பாளர் சங்கம் கேட்டுள்ளது.

(க-132;133)

## எமது உள்ளத்து உணர்வுகளை கலைகள் மூலம் வெளிப்படுத்த முடியும்

### கா.வே.பாலகுமாரன்

(கிளிநொச்சி)

எமது உள்ளத்து உணர்வுகளைக் கலைகள் மூலம் வெளிப்படுத்த முடியுமென தமிழீழ விடுதலைப்புலிகளின் முக்கிய.உறுப்பினர் கா.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு நுண்கலைக் கல்லூரி மாணவியும் நடனகலாவித்தகர் சாம்பவி கண்ணதாசனின் மாணவியுமான தவரட்ணம் ஜெயரஞ்சினியின் நடன அரங்கேற்ற விழாவில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்;

விடுதலைப்போராட்டத்தின் இன்றைய காலகட்டத்தில் இவ்வாறான அரங்கேற்றங்கள் எம்மை நன்றாகச் சிந்திக்க வைப்பதற்கு மிக முக்கிய பங்காற்றி வருகின்றன.

தமிழ் மக்கள் தமது உணர்வுகளை இவ்வாறான அம்பலத்தில் ஆடுதல் மூலம் வெளிப்படுத்த முடியும்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.15 மணிக்கு ஓய்வு பெற்ற அதிபர் திருமதி குணசிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த அரங்கேற்ற நிகழ்வில் தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஏற்றி வைத்தார்.

தொடர்ந்து விழாச் சுடரினை கலாவித்தகர் துவிசார் பொறுப்பாளர்கள் ஏற்றி வைத்தனர். சலங்கைப் பூஜையை புதுக்குடியிருப்பு சிவன்கோவில் ஆலயக் குருக்கள் நிகழ்த்தினார். ஆசியுரைகளை ஆனந்தபுரம் கிருஷ்ணர் ஆலயக் குருக்கள் இராமசாமி , தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ,காலசேத்திரர் சாந்தினி சிவநேசன், முள்ளியவளை பிரதிக் கல்விப் பணிப்பாளர் நாகரட்ணம், பிரதித் திட்டப் பணிப்பாளர் பேரின்பநாயகம் ஆகியோர் நிகழ்த்தினர்.

நிகழ்வின் சிறப்புரைகளை கா.வே.பாலகுமாரனும், கரகசூடாமணி பேரின்பநாயகம் சிவகுருவும் நிகழ்த்தினர். (க-7)

## சம்பள அதிகரிப்பு சுற்றறிக்கையை அமுல்படுத்தக்கோரி தொடர் போராட்டம்

(கொழும்பு)

ஜனாதிபதியினால் இரத்துச் செய்யப்பட்ட சம்பள அதிகரிப்பு சுற்றறிக்கையை அமுல்படுத்துமாறு அழுத்தம் கொடுக்கும் வகையில் அரசாங்க வைத்திய அதிகாரிகள் மேற்கொண்டுவரும் பணிப்புறக்கனிப்பு நடவடிக்கைகள் நேற்று கண்டி, நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்க ளுக்கும் விஸ்தரிக்கப்பட்டது.

கடந்த 7ஆம் திகதி பதுளையில் ஆரம்பமான இந்த பணிப்புறக்கணிப்பு தற்போது நாட்டின் பல பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தப் பணிப்புறக்கணிப்பில் ஏனைய சங்கங்களையும் இணைத் துக்கொள்ளுவதற்கான பேச்சு வார்த்தைகள் விரைவில் இடம் பெறவுள்ளது.

இதேவேளை, இன்று நள்ளி ரவு முதல் 6 தொடரூந்து தொழிற் சங்கங்கள் பணிப்புறக்கணிப்பை மேற்கொள்ள தீர்மானித்துள் ளன.

இரத்துச் செய்யப்பட்ட சுற்றறிக்கையை அமுல்படுத்த நடவ டிக்கை எடுக்கவேண்டுமென்றும் சம்பள அதிகரிப்பை வழங்குமாறு கோரியுமே தொடருந்து தொழிற் சங்கங்கள் பணிப்புறக் கணிப்பில் ஈடுபடவுள்ளதாக தெரிவித்துள் ளன.

தொடருந்து நிலையங்களின் பொறுப்பதிகாரிகள் சங்கம், பொறியியலாளர் சங்கம், நிறை வேற்று அதிகாரிகள் சங்கம், தொட ருந்து கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் மற்றும் தொடருந்து ஓட்டுநர்களின் சங்கம் என்பன இந்த பணிப்புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளன.

(க-9)

## இ.போ.சபை ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை

இலங்கை போக்குவரத்து சபை ஊழியர்களின சம்பளத்தை அதிகரிப்பது தொடர்பாக அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

இதற்கமைய தனியார் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக போக்குவரத்து துறைஅமைச்சர்ஏ.எச்.எம்பௌசி கூறினார்.

நேற்று நுகேகொடையில் நடைபெற்ற வைபவமொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித் தார்.

கொழும்பு மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுத்துவதற்காக இலங்கை போக்குவரத்து சபை 61 புதிய பஸ்களை வழங்கு வதற்கான வைபவம் நேற்று நடைபெற்றது.

தலங்கம, றத்மலான, மிதோட்டுமுல்ல ஆகிய பிரதேசங்களுக்கே இந்த பஸ்கள் வழங்கப்பட்டன. (க-7)

## ஸ்ரீ.சு.கவின் கொழும்பு மேயர் வேட்பாளராக குடுலால்?

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக பாதாள உலகக் குழுவைச் சேர்ந்த குடுலால் நியமிக்கப்படக்கூடும் என்று கூறப்படுகிறது.

பிரதி அமைச்சர் மேர்வின் டி. சில்வாவின் நெருங்கிய சகாவான குடுலால், அமைதிக்கான நீதிபதியாக நியமிக்கப்பட்டதால் சர்ச்சையில் சிக்கினார். பின்னர் அவரது நீதிபதி பதவியை நீதித்துறை அமைச்சர் ஜோன் செனவிரட்ன இரத்துச் செய்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

தினசரி தியானம்

விவேகச் சிந்தனைகள்



பொய்யான வாழ்க்கை அராஜக வாழ்க்கை. ஒதுக்கப்பட்ட- ஒடுக்கப்பட்ட மக்களின் அவல நிலை போன்றவை மனித குலத்தை என்றென்றும் எதிர்த்து நிற்கும் சவால்களாகும்.

சுவாமி விவேகானந்தர்

# நிகழ்ச்சித்திட்ட, நிதி உதவியாளர்கள் பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம்

## கல்வி அமைச்சர் உறுதி

(யாழ்ப்பாணம்)

பட்டதாரி ஆசிரியர்களாக நியமனம் பெறாத பட்டதாரிகள் அனைவரும் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், நிதி திட்டமிடல் உதவியாளர் போன்ற பதவிகளில் பாடசாலைகளில் சேவையாற்றும் அனைவரும் பட்டதாரிகள் ஆசிரியர்களாக நியமனம் பெற ஆவன செய்துள்ளதாக கல்வி, உயர் கல்வி அமைச்சர் சுசில் பிறேமஜெயந்த இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்திடம் உறுதியளித்துள்ளார்.

இது தொடர்பான அமைச்சரவை அங்கீகாரத்தை அடுத்த அமைச்சரவையில் பெறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த வாரம் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக் குழு கல்வி, உயர் கல்வியமைச்சர் சுசில் பிறேமஜெயந்தவை இசிறுபாயாவில் உள்ள அமைச்சரின் அலுவலகத்தில் சந்தித்துத் தமிழ் மொழி மூல கல்விப் பிரச்சினைகள் தொடர்பாகக் கலந்துரையாடிய போதே அமைச்சர் மேற்படி உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

இக் கலந்துரையாடலில் சங்கத் தூதுக் குழுவினர் பட்டதாரிகளின் பிரச்சினைகள் தொடர்பாகவும் சில கோரிக்கைகளை முன் வைத்துக் கலந்துரையாடினர்.

இதேவேளை இவ்வருடம் மேலும்10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் அதில் 2 ஆயிரத்து 500 தமிழ்மொழி மூலப் பட்டதாரிகளை நியமிக்கதான் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இதற்கான வர்த்தமானி அறிவித்தல் மார்ச் மாதத்தில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் சங்கத் தூதுக் குழுவிடம் உறுதியளித்தார் என சங்கத்தின் பொதுச் செயலாளர் திரு.த.மகாசிவம் தெரிவித்தார்.

பொதுச் செயலாளர் தலைமையில் சென்ற சங்க தூதுக்குழுவில் சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் திரு.த.பஞ்சலிங்கம், துணைத் தலைவர் திருமதி ஈ.ஜே.மகேந்திரா, துணைப் பொதுச் செயலாளர் திரு.எம்.நாகேந்திரராஜா ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

# வெலிக்கந்தை பிரதேசத்தில் துணைக்குழுக்கள் இல்லை

## இராணுவம் தெரிவிப்பு

(கொழும்பு)

வெலிக்கந்தைப் பிரதேசத்தில் இராணுவத்துடன் சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுக்களின் முகாம்கள் ஏதும் இல்லை என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

வெலிக்கந்தையின் வடமேற்குப் பகுதிகளான கரபொல, முதுகல, வடமுனை, தீவுச்சேனை பிரதேசங்களில் இராணுவத்தினரும் பொலிஸாரும் தீவிர தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டனர்.

அப்பிரதேசங்களில் துணை இராணுவக் குழுவினர் ஊடுருவி முகாம் அமைத்திருக்கவில்லை என்று மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளனர் என பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கை தலைமையலுவலகம் தெரிவித்துள்ளது.

அப் பிரதேச பொதுமக்களும் முழு ஒத்துழைப்பளித்தனர். துணை இராணுவக் குழுவினரது ஊடுருவல் எதுவும் அப்பிரதேசத்தில் இல்லை என்பது இந்நடவடிக்கையால் மீண்டும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளதென்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## தாயகக் கோட்பாட்டை...

அரசாங்கக் கட்டுப்பாட்டுப் பகுதியில் எந்த ஆயுதக் குழு இயங்கினாலும் அதை நாங்கள் நிறுத்தக் கூறுகின்றோம். கருணா குழு உள்ளிட்ட எந்தக் குழுவாகவிருந்தாலும் எமது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஆயுதங்களை ஏந்துவதைக் கட்டுப்படுத்துவோம்.

பொது மக்களை சித்திரவதை செய்வதையும் படுகொலை செய்வதையும் நிறுத்துவது தொடர்பாக விடுதலைப்புலிகளும் உத்தரவாதம் அளிக்க வேண்டும்.

கூட்டாட்சி முறையை விட ஒற்றையாட்சியின் கீழ்த்தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவிரும்புகின்றோம். ஐக்கிய இராச்சியத்தின் அரச முறையின் கீழ் அதிகாரப் பகிர்வை நடைமுறைப்படுத்தலாம்.

இங்கிலாந்தை எடுத்துக் கொண்டால் அது ஒற்றையாட்சி முறை. ஒற்றையாட்சியின் கீழே அதிகாரப் பகிர்வு அளிக்கப்பட்டுள்ளது. அதனையே இலங்கையிலும் பின்பற்றலாம். இரு தரப்பினரும் உட்கார்ந்து பேசி விட்டுக் கொடுத்தலின் மூலம் பேச்சுக்களை நடத்தலாம்.

ஜெனீவாப் பேச்சுக்களில் வன்முறைகளுக்கும் படுகொலைகளுக்கும் முற்றுப் புள்ளி வைக்கும் வகையில் இரு தரப்பினருக்குமிடையே ஒப்பந்தம் ஏற்படலாம்.

நான் அமைதியை விரும்புகின்ற நபர். போர் வெறியன்அல்ல. இரண்டு மாதங்களாக இராணுவத்தைக் கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றேன்.

அமைதிப் பேச்சுக்கள் மேற்கொள்ள காலமாகும். ஒரே நாடு-ஒரேதேசம்-ஒரே இராணுவம் என்ற நாள் ஒன்று வரும். அவர்கள் காவல் துறையை வைத்திருக்கலாம். ஆனால் இரு இராணுவம், இரு விமானப்படை, இரு கடற்படை இருக்க முடியாது என்றார் மகிந்த ராஜபக்ஷ. (ச-4)


குளிரூட்டிய நவீன கார் வாடகைக்கு



திருமணம் (சோடனையுடன்)
சுற்றுலா
விசேட வைபவங்கள்

போன்ற அனைத்துத்தேவைகளுக்கும் ஆங்கில இலக்கம் கொண்ட நவீன கார் சாரதியுடன் நியாயமான விலையில் உயர்ந்த சேவையுடன் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:
22,சோமசுந்தரம் அவனியூ
சுண்டுக்குளி ,யாழ்ப்பாணம்

T.P: 0777- 903090
0777-246117
077-9172730



இன்றைய தினம் உங்கள் யாழ்.மண்ணில்

முதலாம் ஆண்டுநிறைவில் இரண்டாவது ஆண்டில் வெற்றிகரமாக




தனது சேவையைத் தொடர்ந்து வழங்குவதில் பெருமையடைகிறது. எம்மிடம் GSM தொலைபேசி இணைப்புகள், கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் அனைத்துவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும் , சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இவ் ஏக விநியோகஸ்தர்களால் முதலாம் ஆண்டில் செய்யப்பட்ட அனைத்து சேவைகளும் 2 ஆவது ஆண்டிலும் நடைபெறுகிறது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்

தொடர்புகளுக்கு:-
412,யாழ்.பஸ் நிலையம் முன்பாக
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

MOBITEL GSM

T.P-021-2222031
Fax No-021-2222032


## பாராளுமன்றம் இன்று கூடுகின்றது

(கொழும்பு)

அவசர காலச் சட்டப் பிரேரணை இன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. பிரதிப் பாதுகாப்பு அமைச்சரும் பிரதமருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளார்.

பாராளுமன்றம் சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம்.லொக்குபண்டார தலைமையில் இன்று காலை 9.30 மணிக்கு கூடவுள்ளது. (ச)

## விசாரணை...

தவில்லை என்று அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து அவ் விடயம் தொடர்பாக புலன் விசாரணைசெய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு சி.ஐ.டியினருக்கு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். இது தொடர்பான அறிவித்தலை உடனடியாக சி.ஐ.டியினருக்கு தெரியப்படுத்துமாறு ஊர்காவற்றுறைப் பொலிஸாருக்கு நீதிவான் உத்தரவிட்டார். (ச-4,6,132,133)

## அரசு யுத்த...

ஒரு லட்சத்திற்கும் மேலான மக்கள் பயிற்சி பெற்றுள்ளனர். அவர்கள் இல்லாமல் நாங்கள் சமர்களில் வெற்றி பெற்றிருக்க முடியாது. இதன் மூலம் தாக்குதலுக்கு யார் காரணம் என்பதை புரிந்து கொள்ளமுடியும்.

பொறுப்புள்ள ஓர் அரசியல் இயக்கம் என்ற வகையில் நாங்கள் ஆத்திரம் அடையவில்லை. நாங்கள் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை கடைப்பிடிக்கின்றோம். இலங்கையில் அமைதி உருவாக்கப்பட வேண்டும் என்ற சர்வதேச சமூகத்தின் கவலையை பகிர்ந்து கொள்கின்றோம்.

அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுகின்ற, சித்திரவதைகள் மற்றும் கொலை செய்யப்படுகின்ற நெருக்குவாரங்கள் அனைத்தும் இராணுவ ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலேயே நடைபெறுகின்றது.

கூட்டாட்சி முறையை ஏற்று கொள்ள முடியாது. எமது நிலைப்பாடு என்பது வரலாற்று உண்மைகளின் அடிப்படையிலானது. இரு தேசங்களும் சொந்த வாழ்க்கை முறை, கலாசாரம், மொழியைக் கொண்டவை. இவை அனைத்தும் மதிக்கப்பட்டு நாம் எமது சுயநிர்ணய உரிமையுடன் வாழ்கின்ற நிலை உருவாக வேண்டும். அப்படியான நிலை இல்லாதிருக்கும் போது கூட்டாட்சி முறை என்பது ஏற்கமுடியாதது. முதலில் எமது மக்களினது இறையாண்மை ஒப்புக்கொள்ளப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## மட்டு.விகாராதிபதி...

மோசடிகள் தொடர்பாக உரிய விசாரணை மேற்கொள்ளப்படவில்லை.

இது தொடர்பாக உயர் அதிகாரிகளுக்கு தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சம்மந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுக்கும்வரை சாகும்வரை உண்ணாவிரதம் தொடரும் என அவர் தெரிவித்துள்ளார்.

பல் சமயத்தின் ஒன்றியமும் மற்றும் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் உண்ணாவிரதத்தினை கைவிடுமாறு விடுத்த கோரிக்கையை விகாராதிபதி மறுத்து விட்டார். (ச-4)


உடன் தேவை

ஒப்புநோக்குநர்கள்

(ஆண்கள்- இரவுக் கடமை)

யாழ்.நகர மையத்திலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்திற்குள் இருப்பவர்கள் இன்று பிற்பகல் 4 மணிக்கு நேரில் வரவும்.

வலம்புரி

நிர்வாக உத்தியோகஸ்தர்


## நாடாளுமன்ற...

பாராளுமன்றத்தினுள் மேற்கொண்டு வரும் சத்தியாக்கிரகப் போராட்டத்தை தமிழர் தேசிய கூட்டமைப்பு தற்காலிகமாக ஒத்திவைப்பதென்றும் தமது கோரிக்கைகளுக்கு அழுத்தம் கொடுக்கும் முகமாக இந்தவாரப் பாராளுமன்ற அமர்வுகளைப் பகிஷ்கரிப்பதெனவும் தீர்மானித்துள்ளதாக கூட்டமைப்பின் உறுப்பினரும் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். (ச-து)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 14.02.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.